# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 19.05.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







### ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்

## தொலைபேசி அழைப்பு வாயிலாக பண மோசடி

(காந்தன்)

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடையதாக தெரிவித்து, அது குறித்த விசாரணைகளை முன்னெடுக்காதிருக்க வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பிலிடுமாறு தெரிவித்து பலர் பண மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

உயர் பொலிஸ் அதிகாரிகளின் பெயர்களில் செயற்படுகின்ற குழுவொன்று,

02 ஆம் பக்கத்தில்...



## 21 இல் தளர்த்தப்படுகிறது பயணக்கட்டுப்பாடு

(ராஜ்)

நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் பயணக் கட்டுப்பாட்டை எதிர்வரும் 21 ஆம் திகதி தளர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொவிட் தடுப்பு செயலணியின் பிரதானியான இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி 21 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு

02 ஆம் பக்கத்தில்...



## புதைக்கப்பட்ட விதுஷனின் உடலை மீளவும் தோண்டுமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவு



(மட்டக்களப்பு மாவட்ட நிருபர்)

மட்டக்களப்பு இருதயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த் 3ம் திகதி புலனாய்வுப்பிரிவினர் எனக் கூறி வந்தவர்களினால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட இளைஞன் ஒருவர் சடலமாக கண்டெடுக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் உயிரிழந்த சந்திரன் விதுஷன் எனும் இளைஞனின் சடலத்தினை

02 ஆம் பக்கத்தில்...

## 9 வயது சிறுமிக்கு எமனான ஊஞ்சல் கயிறு

(மட்டக்களப்பு மாவட்ட நிருபர்)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்ன உப்போடை பகுதியில் 9 வயது சிறுமி ஊஞ்சல் கயிறு இறுகி கல்முனை

02 ஆம் பக்கத்தில்...

## ஆலையடிவேம்பு பிறிஸ்டல் கம்பனி மூடப்பட்டது

(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் கொவிட் சட்டங்களை மீறி உள்ளக ரீதியாக விற்பனையில் ஈடுபட்ட பிறிஸ்டல் கம்பனி பிரதேச செயலாளரின் தலையீட்டை அடுத்து மூடப்பட்டது.

கடந்த சில தினங்களாக பிரதேச செயலாளருக்கு மக்களால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து சம்மந்தப்பட்ட இடத்திற்கு இன்று நண்பகல் சென்ற பிரதேச செயலாளர்

02 ஆம் பக்கத்தில்...

## ஆற்றில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு

(க.ருத்திரன்)

மட்டக்களப்பு கிரான் பிரதேசத்தின் ஆயிலடிச்சேனை ஆற்றில் மூழ்கி சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான் கோரவெளி கிராம சேவகர் பிரிவின்

02 ஆம் பக்கத்தில்...

## யாழ் பல்கலைக்கழகத்துக்கு 4.8 மில்லியன் பெறுமதியான ஆர்.என்.ஏ பிரிப்பு இயந்திரம் புலம்பெயர் தமிழரால் கையளிப்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட கொரோனாப் பரிசோதனை ஆய்வுகூடத்துக்கு 4.8 மில்லியன் ரூபா பெறுமதியான தானியங்கி ஆர்.என்.ஏ பிரிப்பு இயந்திரம் ஒன்று புலம்பெயர் தமிழரான

02 ஆம் பக்கத்தில்...






## வீணாகும் நீர்; அணைகட்டும் விவசாயிகள்




(க.ருத்திரன்)

மட்டக்களப்பு பொலநறுவை எல்லலையில் அமைந்துள்ள விலால் ஓடை எனும் இடத்தில் நீரானது வீணாக செல்லாதவாறு மண் மூடைகள் கொண்டு அணைக்கட்டு கட்டும்

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கு மாகாணத்தில் சேதன பசளை உர உற்பத்தியை விரிவுபடுத்த ஆலோசனை



(இஃஜாஸ் ஏ பரீட்)

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ நாட்டின் விவசாயத்தை முழுமையாக சேதனை பசளை உர மாக்குவதற்கு எடுத்த முடிவு தொடர்பாக கிழக்கு மாகாணத்தின் மாகாணத்தில் உரங்களை உற்பத்தி செய்வதற்கான திறனை ஆராய்வதற்காக அனுராதா

02 ஆம் பக்கத்தில்...











## கிழக்கில் நேற்று 265 பேருக்கு தோற்றிய கோரோனா

### கிழக்கில் 4 பேர் மரணம்

(கணிதன்)

கிழக்கு மாகாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கொரோனா தொற்று 265 ஆக அதிகரித்துள்ள நிலையில் மட்டக்களப்பில் 232 பேருக்கு தொற்று அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சுகாதார பிரிவில் 232 பேரும், அம்பாறையில் 7 பேரும், கல்முனையில் 26 பேர் அடங்கலாக 265

02 ஆம் பக்கத்தில்...











## இந்தியா- அமெரிக்கா தலையிடாவிட்டால் 13 இல்லாமல் போய்விடும்

இந்தியா அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கை விவகாரத்தில் இனியும் தலையிடவில்லை என்றால் 13 ஆவது திருத்தச் சட்டமும் இல்லாது

02 ஆம் பக்கத்தில்...

# மட்டக்களப்பில் சில பகுதிகள் தனிமைப்படுத்தல்

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி, பெரிய கல்லாறு பகுதியில் சில பகுதிகள் தனிமைப் படுத்தப்பட்டன என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்துள்ளார்.

பெரியகல்லாறு மூன்றாம், இரண்டாம் வட்டார பிரிவுகளிலுள்ள சில பகுதிகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குறித்த பகுதிகளில் அதிகளவு கொரோனாவைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்தே, இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியர் நா.மயூரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பயணக்கட்டுப்பாட்டினை மீறி மக்கள் செயற்படுகின்றமையினாலேயே தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கிழக்கில் நேற்று 265 பேருக்கு தொற்றிய

**பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுக்குட்பட்ட கோரளைப்பற்று மத்தி சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் 40 பேரும், ஓட்டமாவடி பிரிவில் 11 பேரும், ஏறாவூர் பிரிவில் 46 பேரும், மட்டக்களப்பு பிரிவில் 50 பேரும், காத்தான்குடி பிரிவில் 28 பேரும், களுவாஞ்சிக்குடி பிரிவில் 2 பேரும், வாகரை பிரிவில் 17 பேரும், செங்கலடி பிரிவில் 3 பேரும், பட்டிப்பளை பிரிவில் 5 பேரும், ஆரையம்பதி பிரிவில் 08 பேரும், வவுனதீவு சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் 22 பேருமாக மொத்தம் 163 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.**

**நேற்றைய தினம் கிழக்கில் 4 கொரோனா மரணங்கள் (மட்டக்களப்பு 02, ஏறாவூர் 01, உஹன 01) பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

## கிழக்கு மாகாணத்தில் சேனை பசளை

யஹம்பத்தின் ஆதரவின் கீழ் திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் விசேட கூட்டம் நடைபெற்றது.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் விவசாயத்திற்குத் தேவையான சேதனாப் பசளை உரங்களின் அளவு குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

வரவிருக்கும் பருவங்களுக்கு தேவையான உரங்களை உற்பத்தி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆளுநர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், சம்பந்தப்பட்ட தரவுகளை உடனடியாக பிரதேச செயலக மட்டத்தில் சேகரிக்குமாறு ஆளுநர்தலைமைச்செயலாளருக்கு அறிவுறுத்தினார்.

இதற்கிடையில், சேதனாப் பசளை வேளாண்மையின் வெற்றிக்கு தொடர்ந்து நீர் வழங்கல் வழங்கப்பட வேண்டும் என்பதால் ஆளுநர் மாகாணத்தில் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரை எந்தவித இடையூறும் இல்லாமல் விடுவிக்குமாறு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளருக்கு அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்வில் மாகாணத்தின் தலைமைச் செயலாளர் துசிதா பி.வனிகசிங்க, விவசாய மாகாண செயலாளர் கலாமதி பத்மராஜா, மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் மாகாண விவசாய பணிப்பாளர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




## வீணாகும் நீர்; அணைகட்டும் விவசாயிகள்

நடவடிக்கைகளை விவசாயிகள் தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போதைய கொரோனா தொற்றின் அச்ச நிலமையுடன் வாகநேரி திட்டத்திற்கான விவசாய அமைப்புக்கள் பல ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக தங்களது விவசாய செய்கையை பாதுகாக்கும் வகையில் கடந்த ஒரு வார காலமாக இவ் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மாவட்டத்தில் இடம்பெறும் வெள்ளம் காரணமாக அடிக்கடி இவ் அணைக்கட்டானது உடைப்பெடுப்பதனால் நீரானது வயல் நிலங்களுக்கு செல்லாது வீணாக பயனற்ற வாகையில் ஆறு,கடல்,ஓடைகள்,போன்ற வேறு இடங்களுக்கு வழிந்தோடி செல்வதனால் விவசாய நிலங்கள் நீரின்றி வரண்டு போகின்றன.

இதனால் விவசாய செய்கையில் பாதிப்பு ஏற்படுவதாகவும் இதனை தவீர்க்கும் பொருட்டு பிரதேச விவசாயிகள் இவ் அணைக்கட்டினை தங்களது சொந்த பணத்தினை முதலிட்டு அணைக்கட்டு கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மாதுறு ஓயா நீரானது வாகநேரி குளத்திற்கு சென்றடைய திறந்து விடப்படும் போது மேற்குறித்த விலால் ஓடை எனும் இடத்திலே உடைப்பு உருவெடுத்து காணப்படுவதனால் இந் நிலமை உருவாகியுள்ளது.

இவ் அணைக்கட்டினை கட்டுவதற்காக சுமார் 10 ஆயிரம் மண்முடைகளை கொண்டு நூற்றுக் கனக்கான விவசாயிகளின் பங்களிப்புடன் 10 நாட்க்களாக அணைக்கட்டு கட்டும் நடவடிக்கைகள் இரவு பகலாக இடம்பெற்று வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவம் வருடத்தில் அடிக்கடி இடம்பெறுவதனால் தாம் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.விலால் ஓடை உடைப்பெடுப்பதும் அதனை மண் மூடை கொண்டு கட்டுவதும் தொடர் கதையாகவே உள்ளது.

இதனை இவ்வாறு கட்டுவதன் மூலம் தான் நீரானது தடங்களின்றி வாகநேரி குளத்தினை சென்றடைய வாய்ப்புள்ளது.

இவ் நீரோட்டமானது வாகநேரி குளத்தினை சென்றடையும் வழியில் விவசாயத்தில் ஈடுபடும் விவசாய கிராமங்களான நாமல் கம,குருளுவத்த,அசலபுர,புணானை,கடவத்தமடு போன்ற இடங்களில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் மேற்கொண்டுள்ள சிங்கள,தமிழ் முஸ்லிம் விவசாயிகள் நன்மை அடைகின்றனர்.

அதேபோன்று வாகநேரி குளத்து நீரினை கொண்டு வாழைச்சேனை காகித ஆலையின் தேவைப்பாடுகளுடன் மேலும் 10 ஆயிரம் ஏக்கரில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெள்ளம் காரணமாக உடைப்பெடுக்கப்பட்ட விலால் ஓடையானது படிப்படியாக விசாலமடைந்து உருவெடுத்ததுடன் பல சிறிய ஓடைகளை புதிதாக உருவாக்கியுள்ளது.

இச் செயற்பாடானது வாகநேரி நீர்பாசன விவசாயத்திட்டம் மற்றும் ஏனைய பிரதேச விவசாய செய்கையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் விவசாய அமைப்புக்களினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையினால் கமத்தொழில் கிராமிய பொருளாதார அலுவல்கள் நீர்பாசன மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசன் அவர்களிடம் குறித்த அமைச்சின் இராஜங்க அமைச்சராகவிருந்த எம்.எஸ்.எஸ்.அமிர் அலி அவர்கள் விடுத்த வேண்டுகோளின் அடிப்டைப்படையில் அணைக்கட்டு கட்டுவதற்கான முயற்சி முன்னெடுக்கும் முகமாக அடிக்கல் நடப்பட்டது.

இதனால் விவசாயிகள் என்றுமில்லா மகிழ்சியடைந்தனர். இருந்தபோதிலும் நல்லாட்சி அரசாங்கம் தேர்தலில் தோல்வியடைந்ததினால் இத்திட்டம் கைவிடப்பப்பட்டது.இன்று வரை அதனை கட்டுவதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

தங்களுக்கு இடம்பெற்ற இவ் நிலமை குறித்து விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.எனவே இத்திட்டத்தினை முன்னெடுக்க தற்போது மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பொதுஜனபெரமுன அரசினை பிரதிநிதித்துவப் படுத்தும் இராஜங்க அமைச்சர்,பாராளுமன்ற உறுப்பினர் என்கின்ற அரசியல் பிரமுகர்கள் முன்வர வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## இந்தியா- அமெரிக்கா தலையிடாவிட்டால்

போய்விடும் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் கூறியுள்ளதாவது, இந்தியாவிடம் ஒன்றையே கேட்க விரும்புகின்றோம்.

தற்போது இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்காவிடின் உங்களால் இனி எதனையும் செய்ய முடியாமல் போகும்.

மேலும், இலங்கை தீவுக்குள்ளே பூகோலம் நலன்சார்ந்த பிரச்சினையில் இந்தியா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் சேர்ந்த கோர் அமைப்பாக இருக்கலாம் அல்லது ஐரோப்பியா உள்ளிட்ட ஏதாவது ஒரு அமைப்பு, வடக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

குறித்த வாக்கெடுப்பை நடத்துவதன் ஊடாகவே எங்களுடைய மக்களின் தலைவிதியை அவர்களே தீர்மானிக்க கூடிய வாய்ப்பு ஏற்படும். அதுதான் நிரந்தர அரசியல் தீர்வாக இருக்கும்.

ஆகவே இவ்விடயத்தில் இறுக்கமான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்

**வீடுகளிலுள்ள தொலைபேசி இலக்கங்களை தொடர்புகொண்டு மக்களை அச்சுறுத்தி பணம் பெறுவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.**

**இது தொடர்பில் 50 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் கூறினார்.அவ்வாறு பணம் வைப்பிலிடும் பட்சத்தில், குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்படாது விசாரணைகள் நிறைவு செய்யப்படும் என பண மோசடியில் ஈடுபடும் குழு தெரிவிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

## 21 இல் தளர்த்தப்படுகிறது பயணக்கட்டுப்பாடு

**பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும் என்று அவர் கூறியுள்ளார். இதேவேளை ஜுன் 23 ஆம் திகதி இரவு 10 மணி முதல் 25 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையிலும் மீண்டும் பயணக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.**

**21 ஆம் திகதியுடன் பயணக் கட்டுப்பாட்டை தளர்த்தினாலும் மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.**

## ஆலையடிவேம்பு பிறிஸ்டல் கம்பனி

வி.பபாகரன் தலைமையிலான குழுவினர் வியாபாரம் நடைபெறுவதை அவதானித்து அக்கரைப்பற்று பொலிசாருக்கும் தகவலை வழங்கினர். இந்நிலையில் குறித்த இடத்திற்கு விரைந்த பொலிசாரும் சம்பவத்தை அவதானித்ததுடன் அங்கிருந்தவர்களையும் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளனர். இச்சம்பவத்தை பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தியதுடன் கொவிட் சட்டத்தை அனைவரும் பின்பற்றி நடக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதே நேரம் கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட நிலையில் எதிர்வரும் 07 மாதம் 20 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிசார் தெரிவித்தனர்.

## ஆற்றில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு

ஆயிலடிச்சேனை கிராமத்தை சேர்ந்த நாகராசா கரிசனன் வயது (14) என்ற சிறுவன் உயிரிழந்துள்ளான்.

நேற்று மாலை 2.30 மணியளவில் நண்பருடன் தோணியில் விளையாடிக் கொண்டிருக்கும்போது தோணியானது காற்றின் வேகம் காரணமாக ஆற்றின் நடுப்பகுதியினை சென்றடைய முற்பட்டுள்ளது. இதனால் கரையில் நின்ற நண்பனின் உதவியினை நாடி காப்பாற்றும்படி சத்தமிட்டுள்ளார். கரையில் நின்ற நண்பனோ தோணியின் கயிற்றினை பிடித்து இழுத்து கட்ட முயற்சி செய்தும் பலன் கிடைக்கவில்லை என சம்பவத்துடன் தொடர்புபட்ட அவரது நண்பன ஜெ.சிந்துஜன் தெரிவித்தார்.

இறுதியில் அயலவர்களின் உதவியினை நாடியுள்ளனர்.அதற்குள் பயத்தின் காரணமாக தோணியில் இருந்தவர் ஆற்றில் பாய்துள்ளார். பாய்ந்தவரை காப்பாற்ற எடுத்த முயற்சி தோல்வியடைந்தது. இறுதியில் நேற்று வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் சடலத்தினை மீட்டுள்ளனர். சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## 9 வயது சிறுமிக்கு எமனான ஊஞ்சல்

**ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.**

**ஊஞ்சலில் விளையாடிக்கொண்டிருந்த நிலையில் கயிற்றில் கழுத்து சிக்குண்டு மயக்கமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

**மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் இடம் போதாமை காரணமாக கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.**

**குறித்த சிறுமி அவரது குடும்பத்தில் இரண்டு பிள்ளையில் மூத்த பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.**




## யாழ் பல்கலைக்கழகத்துக்கு 4.8 மில்லியன் பெறுமதியான

**சுப்பிரமணியம் கதிர்காமநாதனால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.**

**மருத்துவ பீட கொரோனாப் பரிசோதனை ஆய்வு கூடத்தின் தேவைகருதி, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி இந்த அன்பளிப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.**

**இந்த தானியங்கி ஆர். என். ஏ பிரிப்பு இயந்திரத்தை பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு, வியாழக்கிழமை 17 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இடம்பெற்றது.**

**நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, இயந்திரத்துக்கான ஆவணக் கோப்பை, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரவிராஜ் உடன் இணைந்து ஒட்டுண்ணியல் துறைத் தலைவர் மருத்துவர் ஏ.முருகானந்தனிடம் கையளித்தார்.**

**இந்த நிகழ்வில் நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியர் திருமதி கலாமதி முருகானந்தன்,உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கண்ணதாசன், மருத்துவபீட சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எஸ். ரமேஷ் மற்றும் கொரோனா பரிசோதனை ஆய்வு கூடத்தின் மருத்துவ ஆய்வு கூடத் தொழில் நுட்பவியலாளர்கள் கலந்து கொண்டனர்.**

**தானியங்கி ஆர். என். ஏ பிரிப்பு இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கிய புலம்பெயர் தமிழரான சுப்பிரமணியம் கதிர்காமநாதன் மற்றும் அதனை ஏற்பாடு செய்த யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி ஆகியோர் நிகழ் நிலை வழியாக இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.**




## புதைக்கப்பட்ட விதுனின் உடலை மீளவும் தோண்டுமாறு

தோண்டியெடுத்து இலங்கையிலேயே சிறந்த நிபுணத்துவம் வாய்ந்த பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் முன்னிலையில் மீள் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 3ம் திகதி மட்டக்ளப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ஏ.இளங்கோவன் அவர்களின் தலமையிலான சட்டவைத்தியர்களினால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் குறித்த இளைஞன் அதிகளவான ஐஸ் போதைப்;பொருள் பைகளை வாயில் போட்டு விழுங்கியதன் காரணமாக உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் வெளியானது என்பதை பொலிஸார் உறுதிப்படுத்தியிருந்தனர்.

இவரின் மரணம் தொடர்பான வழக்கில் மரணமானவரின் குடும்பத்தினர் சாட்சியம் அளிக்கையில் தங்களின் மகனின் பிரேத பிரிசோதயில் சந்தேகம் இருப்பதாக அதற்கான நீதி கிடைக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தனர்.குறித்த வழக்கானது நேற்று கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நீதிபதியின் அறையில் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் அவர்களின் முன்நிலையில் வழக்கு விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது.

புதைக்கப்பட்ட விதுஷனின் உடலை வருகின்ற திங்கட்கிழமை தோண்டி எடுத்து இலங்கையில் மிகவும் அனுபவம் வாய்ந்த பேராதனை பல்கலைக்கழகத்தினுடைய பேராசிரியர் அவர்களின் தலமையில் பிரேத பரிசோதனை செய்ய நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

SRI JEWELLERY



Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

Aaran Ayurveda
& Wellness Massage



Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்



கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா -வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



# கட்டாய அன்ரிஜன் பரிசோதனைகள்



(பொன்ஆனந்தம்)

திருகோணமலை நகரின் சில இடங்களில் அதிக நடமாட்டம் காணப்பட்ட இடங்களில் நேற்று கட்டாய அன்ரிஜன் பரிசோதனைகள் செய்யப்பட்டன.

குறிப்பாக உட்துறைமுகவீதி 22 படை பிரிவு சந்திக்கு முன்பதாகவுள்ள நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் அலுவலகத்திற்கு முன்பாக பயணித்த பலரும் இடைமறிக்கப்பட்டு கட்டாய பரிசோதனை கள் செய்யப்பட்டன. இதனைசுகாதார அதிகாரிகளும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

வெள்ளிக்கிழமை ஆகையினால் வங்கி உள்ளிட்ட அவசர நடவடிக்கை க்கு பலரும் பயணம் செய்தனர். இந்நடவடிக்கை யால் நண்பகலுடன் முடிவடைந்த வங்கி சேவையைபெறமுடியாது போனதாக மக்கள் தெரிவிக்கின்றனர். ஆயினும் மக்களின் நடமாட்டமும் அதிகமானதால் சுகாதார பகுதியினர் இந்நடவடிக்கை யை மேற்கொண்டன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சம்பள அதிகரிப்பு கோரி அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தினால் ஜனாதிபதிக்கு கடிதம்

(மட்டக்களப்பு மாவட்ட நிருபர்)

சம்பள அதிகரிப்பை கோரி அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தினால் நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிற்கு அவசரமாக கடிதமென்றினை அனுப்பிவைத்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய அளவிலான எரிபொருள் விலையேற்றத்தை தொடர்ந்து தாமும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், போக்குவரத்து செலவு மிகவும் அதிகரித்துள்ளதுடன், வாழ்க்கைச் செலவும் தாக்குப் பிடிக்க முடியாதளவு மிகவும் மோசமாக அதிகரித்துள்ளது.

எரிபொருள் விலையேற்றத்திற்கு முன்பிருந்தே, அரச உத்தியோகத்தர்களில் ஆரம்ப மற்றும் நடுமட்ட உத்தியோகத்தர்களின் வாழ்வாதாரத்திற்கான சம்பளம் போதாதுள்ளதாக குறிப்பிட்டு சம்பள அதிகரிப்பொன்றினை வழங்குமாறு கேட்டு ஏலவே கடந்த 2021.05.01ம் திகதியும் தங்களுக்கு கடிதமொன்றினை அனுப்பியிருந்தோம் என குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு பெருமளவான அரச உத்தியோகத்தர்கள், இவ்வுத்தியோகத்தின் பிரதிபலனாக கிடைக்கும் சம்பளத்தை மாத்திரமே நம்பி வாழ்ந்து கொண்டிருப்பதனையும், ஆரம்ப மற்றும் இடைநிலை உத்தியோகத்தர்களின் சம்பளம் மிகவும் குறைவாக இருப்பதனையும், இவ்வரும்படியினைக் கொண்டு, சாதாரணமாக 04 அல்லது 05 உறுப்பினர்களைக் கொண்ட, குடும்பங்களின் வாழ்வாதார அடிப்படை அத்தியவசியத் தேவைகளான உணவு, உடை, வைத்திய தேவைகளுக்கும், பிள்ளைகளின் கல்வித் தேவைகளுக்கும்போதாமல் இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் எரிபொருள் விலையேற்றமானது, தம்மை மேலும் பாதிப்படையச் செய்துள்ளதாகவும், இவற்றைக் கருத்திற் கொண்டு ஆரம்ப மற்றும் இடைத்தர உத்தியோகத்தர்களின் சம்பளத்தை மேலும் 50சத வீதத்தால் அதிகாரிக்குமபடியும், சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கிடையில், விரைவாக ரூபா 10,000/= முதல் ரூபா 15,000/= வரையான இடைக்காலக் கொடுப்பனவொன்றினையும் வழங்க ஏற்பாடுகளை

செய்து தருமாறு கோருவதாக குறித்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தினால் அதன் தலைவர் ஏ.ஜீ.முபாறக், எம்.எம்.எம்.பைஸ் உதவிச்செயலாளர் ஆகியோரினால் ஒப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கோரிக்கையினை முன்வைத்துள்ளனரென குறித்த தொழிற்சங்கத்தின் ஊடக அறிக்கையில் தெரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தேற்சியாக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு இளைக்கப்படும் அநீதிகள் மற்றும் தேவைப்பாடுகளுக்காக தொழிலுரிமை கோரிய போராட்டங்களை மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நடாத்தி தீர்வினை பெற்றுக்கொடுப்பதில் முன்னின்று செயற்பட்டுவரும் தொழிற்சங்கம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பயணத்தடையை மீறி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட 18 வர்த்தக நிலையங்களுக்கு சீல்

(ரீ.எல்ஜவ்பர்கான்)

பயணத்தடையை மீறி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட 18 வர்த்தக நிலையங்களுக்கு தனிமைப் படுத்தல் சட்டத்தின்கீழ் சீல் வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.இச்சம்பவம் நேற்று முழு நாளும் மட்டக்களப்பு காத்தான்குடி நகரில் இடம் பெற்றது.

காத்தான்குடி பிரதான வீதி உட்பட உள் வீதிகளிலும் பொலிசார் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இராணுவத்தினர் நகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது பயணத்தடையை மீறி வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 18 வர்த்க நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் எம் எம் ஜவாகிர் சுகாதார வைத்தியதிகாரி பணிமனை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இராணுவத்தினர் நகர சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட பலரும் இந் நடவடிக்கையில் பங்கு கொண்டிருந்தனர்





# சம்பூர் கிராம மக்கள் எதிர்கொள்ளும் அவலம்

(பைஷல் இஸ்மாயில்)

திருகோணமலை - மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட சம்பூர் கிராமத்திலுள்ள கமநலச் சேவை நிலைய வீதி (ஏ.பி.சி வீதி) கடந்த பல வருடங்களாக குண்டும் குழியுமாக காணப்படுகின்றது. இவ்வீதியால் பிரயாணம் செய்வது மிகக் கடினமாக உள்ளது என்றும் இந்த வீதியை புணரமைத்துத் தருமாறு கோரி அப்பிரதேச மக்களும், விவசாயிகளும், வாகன சாரதிகளும், பாடசாலை மாணவர்களும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளையும், உள்ளூர் அரசியல்வாதிகளையும் கேட்டுக் கொள்கின்றனர்.

பயங்கரவாத யுத்த காலங்களில் இடம்பெயர்ந்த மக்கள் கடந்த 2015 ஆண்டு மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவ்வாறு சூடைக்குடா, கூனித்தீவு, நவரத்தன புரம் போன்ற கிராமங்களில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள் தங்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்யவதாக இருந்தால் இவ்வீதியால்தான் பணிக்கவேண்டும் என்றும் வேறு மாற்று வீதிகள் இல்லை எனவும் அம்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதி சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை குண்றும் குழியுமாக காணப்படுவதால் குறித்த கிராமங்களில் வசிக்கின்ற மக்கள் வைத்தியசாலைக்குச் செல்வதாக இருந்தால் பல சிரமங்களை எதிர்கொண்டு செல்லவேண்டியுள்ளது. குறிப்பாக அவசர சிகிச்சையை பெற்றுக் கொள்ள செல்கின்றவர்களும், கர்ப்பிணித் தாய்மார்களும் பாரிய சிரமங்களை எதிர்நோக்கிச் செல்லவேண்டியுள்ளது என்றும் மழை காலங்களில் இந்த வீதியால் முற்று முழுதாக பிரயாணம் செய்ய முடியாதுள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து உள்ளூர் அரசியல்வாதிகளிடமும், அதிகாரிகளிடமும் பல தடவைகள் முறையிட்டும் எவ்வித நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை என்றும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டத்தில் குறித்த வீதியை உள்வாங்கி புணரமைத்துத் தருமாறு கோரிய கடிதத்தையும் பிரதேச செயலாளரிடம் வழங்கியிருந்தோம். அதற்கு பிரதேச செயலாளரும் செய்து தருவதாக வாக்குறுதியளித்திருந்தார். பின்னர் பிரதேச செயலகத்தினால் மேற்கெள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டத்தில் குறித்த வீதி புறக்கணிக்கப்பட்டு மக்கள் பயன்படுத்தாத சம்பூர் குருக்கு வீதியை 20 இலட்சம் ரூபா நிதியில் அமைத்துள்ளனர் என்றும் அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, பயங்கரவாத காலத்திலும், பயங்கரவாதம் அற்ற இந்தக் காலத்திலும் பல துன்பங்களையும், கஷ்டங்களையும் அம்மக்கள் தொடராக எதிர்நோக்கிக் கொண்டு வருவதை எம் நாட்டு அரசாங்கமும், இது தொடர்பான உயர் அதிகாரிகளும், உள்ளூர் அரசியல்வாதிகளும் கவனத்திற் கொண்டு அக்கிராம மக்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

# வெருகல் பிரிவிற்கு நிவாரணம்



(பொன்ஆனந்தம்)

வெருகல் பிரதேச செயலாளரது வேண்டுகோளுக்கு அமைய, அப்பிரதேச செயலாளர் பிரிவில் கோவிட் 19 தோற்றுக் காரணமாக இன்னலுறும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்க நிவாரண பொருட்கள் பிரதேச செயலாளர் க. குணநாதன் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதனை திருகோணமலை நலன்புரிச் சங்கத் தலைவர் ந. குகதாசன் கையளித்தார்

372 500/- பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் இதன்போது திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்க தலைவர் ந. குகதாஸன் பிரதேச செயலாளரிடம் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.









# வட்டவளை கரோலினா தோட்ட மக்கள் ஆர்பாட்டம்

(க.கிஷாந்தன்)



அட்டன், வட்டவளை கரோலினா தோட்டத்தில் உள்ள மக்கள் நேற்று பிற்பகல் பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வுக் கோரி ஆர்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

பயணக்கட்டுப்பாடுகள் காரணமாக கொழும்பு போன்ற வெளியிடங்களுக்கு சென்று தொழில் செய்ய முடியாத நிலையில் தாம் வாழ்வாரத்தை இழந்து நிர்கதியாகியுள்ளதாக ஆர்ப்பாட்டகாரர்கள் தெரிவித்தனர்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் 5000 ரூபா நிவாரணம் கூட இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை என ஆர்ப்பாட்டகாரர்கள் தெரிவித்தனர்.

இதனால் தமது பிள்ளைகள் உள்ளிட்டோம் ஒருவேளை உணவுக்காக கஸ்டப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இதுவரை தோட்ட தொழிற்சங்க பிரதிநிதிகள் கூட தமது தோட்ட பகுதிக்கு வருகைத் தந்து தம்மை விசாரிக்கவில்லை என ஆர்ப்பாட்டகாரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆகவே மேற்படி கோரிக்கைகளுக்கு மலையக அரசியல் தலைமைகள் உடனடி தீர்வை வழங்க வேண்டும் எனவும் தீர்வு கிடைக்காத பட்சத்தில் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் ஆர்ப்பாட்டகாரர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, ஜூன் மாதம் 21 ஆம் திகதி அதிகாலை 04 மணிக்கு பயணக்கட்டுப்பாடு நீக்கப்படும் என இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இன்று பிற்பகல் தெரிவித்தார்.

எனினும், மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாடு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என இராணுவத்தளபதி மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடதக்கது.

## மட்டக்களப்பு வாவியில் 1.5 மில்லியன் இறால் குஞ்சுகள் விடுவிப்பு





மட்டக்களப்பு வாவியில் 1.5 மில்லியன் இறால் குஞ்சுகளை விடுவிக்கும் நிகழ்வு கடற்தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

மட்டக்களப்பு வாவியின் பிள்ளையாரடி மற்றும் வவுனதீவு பகுதிகளில் இன்று காலை 4.00 மணிக்கு குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ருக்சான் குரூஸ் தலைமையில் குறித்த இரால் குஞ்சுகள் வாவியில் பாதுகாப்பாக விடுவிக்கப்பட்டன.

இங்கு கருத்துவெளியிட்ட மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரூக்சான் குரூஸ்,

மட்டக்களப்பு வாவியில் மீன்வளத்தை அதிகரிக்கவும் மீனவரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் குறித்த பணி முன்னெடுக்கப்படுவதாகவும் இதன் பலனை இன்னும் சில மாதங்களில் மீனவர்கள் அடைந்துகொள்வர் என்றும் தெரிவித்தார். அத்தோடு எதிர்காலத்தில் மேலும் இரால் குஞ்சுகளும் மீன் குஞ்சுகளும் விடுவதற்கான நடவடிக்கைகள் மு;ன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கடற்தொழில் அமைச்சரின் பிரதிநிகளாக, மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் த.சிவானந்தராஜா மற்றும் சு.சியாந் ஆகியோருடன் மாவட்ட கடற்தொழில் திணைக்கள ஊழியர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு முதலைக்குடா மகிழடித்தீவு பகுதிகளில் 380 ஏக்கர் நிலப்பரப்பில் இறால் வளர்புத் திட்டம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மண்முனைத் தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முதலைக்குடா மகிழடித்தீவு பகுதிகளில் 380 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படவுள்ள இரால்வளர்புத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்ஜினி முகுந்தன், தேசியநீர்வாழ் உயிரினவளர்ப்பு அதிகார சபை உதவிப் பணிப்பாளர் ரவிகுமார், பட்டிப்பளைப் பிரதேசசெயலாளர் திருமதி. டி. தட்சனாகௌரி உள்ளிட்ட பங்குதார திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பட்டிப்பளை பிரதேச சபைத் தவிசாளர், உறுப்பினர்கள், சமுக அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

நாட்டின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் நவீன முறையில் இறால் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டங்களை அறிமுகம் செய்யும் அரசின் விசேட வேலைத் திட்டத்தினை தேசியநீர்வாழ் உயிரினவளர்ப்பு அதிகார சபை முன்னெடுத்து வரும் இத் திட்டத்தில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 380 ஏக்கர் நிலப்பரப்பில் இறால் வளர்ப்புத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இவற்றில் 42 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சிறியளவிலான முதலீட்டாளர்களுக்கு தலா ஒரு ஹெக்டேயர் அளவிலும், 60 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நடுத்தர அளவிலான முதலீட்டாளர்களுக்கு தலா 04 ஹெக்டேயர் அளவிலும், 50 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பாரிய அளவிலான முதலீட்டாளர்களுக்கு 08 தொடக்கம் 20 ஹெக்டேயர் அளவிலும் இறால் வளர்ப்பிற்காக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் நான்காம் கட்டமாக பெண்களுக்கான சுகாதார பாதுகாப்பு பொதிகள் வழங்கி வைப்பு

(இஃஜாஸ் -ஏ-பரீட்)



வன்னி ஹோப் அவுஸ்திரேவியா நிறுவனத்தின் நிதி அனுசரணையில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் கோவிட்-19 தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்டு வீடுகளில் இருந்து வெளியே செல்ல முடியாதுள்ள பெண்களின் சுகாதார தேவையைக் கருத்திற்கொண்டு பெண்களுக்கான சுகாதார பாதுகாப்பு பொருட்கள் 1000 பொதிகள் நான்காம் கட்டமாக வழங்கி வைக்கப்பட்டது.

தோப்பூர் உப பிரதேச செயலகத்தில் மூதூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். அரபாத் அவர்களிடம் மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிஸ் அவர்களினால் கைளிக்கப்பட்டது.

கோவிட்-19 தாக்கம் காரணமாக நாடளாவிய ரீதியில் சுமார் ஒரு மாதத்திற்கு மேல் முடக்கம் மற்றும் பிரயாணதடை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு வந்த நிலையில் பெண்களின் சுகாதார அசௌகரிய நிலமையைக் கருத்திற் கொண்டு மூதூர் பிரதேச செயலகத்தினால் வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்திற்கு விடுத்த விசேட வேண்டுகோளின் அடிப்படையில் வன்னி ஹோப் நிறுவனத்தின் அவசரகால நிவாரண நடவடிக்கை திட்டத்தின் கீழ் இந்த உதவிகள் வழங்கப்பட்டது.

குறித்த சுகாதார பாதுபாப்பு பொதிகள் மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஊடாகவும் தோப்பூர் பிரதேச தாய்சேய் குடும்பநல உத்தியோகத்தர்கள் ஊடாகவும் பெண்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மூதூர் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம்.கஸ்மி, பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ. எல். எம் நௌபர், மூதூர் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ். எம். தானீஸ், தோப்பூர் குடும்ப நல உத்தியோத்தர் திருமதி ஹிசானா ஆசிக், மக்கள் சேவை மன்றத்தின் திட்ட உத்தியோகத்தர் ஆர். கணேசமூர்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு 7500 ரூபா விசேட கொடுப்பனவு

பைஷல் இஸ்மாயில்

சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு ஜுன் மாதம் முதல் மூன்று மாத காலப் பகுதிக்கு 7500 ரூபா வீதம் விசேட கொடுப்பனவு வழங்கப்படும் என்று சுகாதார சுதேச மருத்துவத் துறை அமைச்சு அதற்கான சுற்று நிருபத்தை 2021.06.16 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

இதற்கமைய கொவிட் 19 கொரோனா பரவல் நிலைமைக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் சுகாதாரத் துறையின் அனைத்து தர உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் அதில் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சுகாதார அமைச்சின் கீழ் இணைப்பு செய்யப்பட்டு கடமையாற்றி வருகின்ற அனைத்து உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கும் இக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வறுமை மாணவர்களின் கல்வியில் அக்கறை கொள்ளாத அரசு மதுபானத்துக்கு வழங்கி அரசின் வங்குரோதத்தை காட்டியுள்ளது

### முன்னாள் எம்.பி. ஹுனைஸ் பாறூக்



(வாஸ் கூஞ்ஞ)

நாட்டில் இருந்துவரும் இக்கட்டான சூழ்நிலையில் இந்த அரசானது வறுமை கோட்டுக்குள் வாழும் மாணவ சமூகத்தின் கல்வியில் அக்கறை கொள்ளாது மதுபானத்துக்கு கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தை நோக்கும்போது இவ் அரசின் வங்குரோத்து நிலை வெளிச்சமாகியுள்ளது என முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரனியுமான ஹுனைஸ் பாறூக் இவ்வாறு ஊடக சந்திப்பின்போது தெரிவித்தார்.

முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரனியுமான ஹுனைஸ் பாறூக் வெள்ளிக்கிழமை (18.06.2021) நடாத்திய ஊடக சந்திப்பின்போது தெரிவிக்கையில்

இன்று ஆட்சி பீடம் ஏறி நிற்கின்ற மகிந்த அரசாங்கமானது கடந்த காலத்தில் தேர்தலின் போது மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியில் மக்களிடையே கட்டவிழ்க்கப்பட்ட இனவாத கதைகள் செயற்பாடுகள் இன்றைய நிலையை நோக்கும்போது அது தாங்கள் ஆட்சி பீடம் ஏறுவதற்காக வழங்கப்பட்ட வாக்குறுதி என்பதை அவர்களுக்கு வாக்களித்த மக்களே இன்று நடு வீதியில் இறங்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இன்றைய வேடிக்கையான விடயம் என்னவென்றால் இந்த அரசானது மதுபானத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள முன்னுரிமை இந்த நாட்டில் வாழுகின்ற எதிர்கால சமூகத்துக்கு வழங்காதது மிகவும் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது.

மிகவும் வறுமை கோட்டுக்குள் வாழும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் தங்கள் பாட வகுப்புக்களை தொடர்வதற்கான 'சூம்' வகுப்பக்களில் கலந்துகொள்ள முடியாத நிலையில் திக்குமுக்காடிக் கொண்டு இருக்கின்றார்கள்.

இவ்வாறு இருக்க தற்பொழுது மதுபானம் நடமாடும் சேவையில் வழங்குவதற்கு மந்திரி சபையிலும் தீர்மானித்திருக்கின்றார்கள். இதற்கு சுகாதார மட்டத்தில் ஆட்சேபனை எழுப்பப்பட்ட நிலை ஒருபுறமிருக்க புத்தி ஜீவிகள் நாடாளுமன்றத்தில் சட்டத்தை ஏற்படுத்தக்கூடிய அமைச்சர்கள் இந்த அரசை சார்ந்தவர்கள் மதுபானம் வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் இவ்வேளையில் ஒரு சிறிதளவான முன்னேற்பாடுகள் மாணவ சமூகத்துக்கு எடுக்காததைப் பார்க்கும்போது இந்த அரசானது எந்தளவு வங்குரோத்துக்கு சென்றுள்ளது என்பதை கவனிக்க முடியும்.

இன்று பெற்றோலிய பொருட்களுக்கு விலைகள் அதிகரித்திருப்பதைப் பார்க்கும்போது 2020 மார்ச் மாதம் 30 ந் திகதி தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அன்றைய நேரத்தில் மசகு எண்ணெயின் விலை குறைந்திருந்தது.

அப்பொழுது எரிபொருளின் விலையை குறைக்காது இதில் சேமிக்கப்படும் பணத்தை பெற்றோலிய விலை அதிகரிக்கும்போது விலையை ஏற்றாது சமப்படுத்துவதற்காக இவ் பணத்தை சேமிக்கின்றோம் என்றனர்.

ஆனால் இவ்வாறு சேமிக்கப்பட்ட பணத்துக்கு என்ன நடந்தது என்று இதன் துறை சார்ந்த அமைச்சரோ அல்லது அமைச்சர்களோ ஜனாதிபதியோ இன்று இதற்கு பதில் சொல்ல முடியாது தடுமாறுகின்றனர்.

பெற்றோலிய விலை ஏற்றத்தைப்பற்றி ஜனாதிபதி ஒரு கருத்தையும் அமைச்சர் ஒரு கருத்தையும் ஆளும் கட்சிக்குள்ளேயே ஒரு கூட்டு முடிவை தெரிவிக்க முடியாத நிலையில் இருக்கின்றார்கள்.

குறிப்பிட்ட அமைச்சருக்கு எதிராக ஜனாதிபதியும் பிரதமரும் இவர்களின் கட்சியின் செயலாளரும் நடவடிக்கை எடுக்கின்றபோது குறி;ப்பிட்ட அமைச்சர் இதன் உண்மை தன்மையை வெளிகொணர்ந்தார். இதன்பிறகு சிறு பிள்ளைத்தனமாக பிரதமரும் ஏனையவரும் இதை மழுங்கடிக்கும் தன்மையில் பேசுவதையும் நோக்கக்கூடியதாக இருக்கின்றது.

இவற்றையெல்லாம் நோக்கும்பொது இந்த நாட்டை முன்னெடுப்பதற்கும் கொண்டு செல்வதற்கும் இந்த அரசு தடுமாறிக் கொண்ட இருக்கின்றது. ஆகவே இவர்கள் இந்த ஆட்சியை நன்கு செய்யக்கூடிய எதிர்கட்சியிடம் கையளிப்பதே மேலாகும்.

இவ்வாறு இவர்கள் செய்வார்களானால் இவர்கள் இந்த நாட்டுக்கு, மக்களுக்கு, இளம் சமூகத்தக்கு மற்றும் மாணவர்களுக்கு செய்யும் ஒரு நல்ல காரியமாக இருக்கும் என நான் இவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என இவ்வாறு முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரனியுமான ஹுனைஸ் பாறூக் இவ்வாறு ஊடக சந்திப்பின்போது தெரிவித்தார்.



# கல்முனைக்குடி பிரதான வீதியில் குப்பை வீசுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு

**( அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனைக்குடி பிரதான வீதியின் சில முக்கிய இடங்களில் குப்பை வீசுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்முனை மாநகர சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இச்செயற்பாட்டில் ஈடுபடுகின்ற நபர்களைக் கண்டறிந்து, நடவடிக்கை எடுப்பதற்கான பணிப்புரையையும் ஆலோசனைகளையும் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கியுள்ளார்.

தற்போது திண்மக்கழிவகற்றல் சேவை மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கல்முனைக்குடி வலயத்தைப் பொறுத்தளவில் ஒவ்வொரு வீதியிலும் வாரத்திற்கு இருதடவை குப்பை சேகரிப்புக்காக திண்மக்கழிவகற்றல் வாகனங்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. பிரதான வீதியில் நாளாந்தம் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன.

அத்துடன் மேற்படி முக்கிய சந்திகளில் ஒவ்வொரு நாளும் காலை 6.30 தொடக்கம் %.00 மணி வரை திண்மக்கழிவகற்றல் சேவை வாகனங்கள் தரித்து நின்று குப்பைகளை சேகரிக்கின்றன. இதன்போது அவ்விடங்களில் ஏற்கனவே வீசப்பட்டு, குவிந்து கிடக்கின்ற குப்பைகள் அள்ளப்படுவதுடன் பொது மக்களினால் ஒப்படைக்கப்படுகின்ற குப்பைகளும் பொறுப்பேற்கப்படுகின்றன.



எனினும் இவ்வாறு குப்பைகள் சேகரித்து, அகற்றிச் செல்லப்பட்ட பின்னரும் சிலர் வேண்டுமென்றே பொறுப்பற்ற முறையில் இவ்விடங்களில் குப்பைகளை வீசிவிட்டு செல்கின்றனர். சட்டத்தை மதிக்காமலும் பொதுநலன் சார்ந்த உணர்வு எதுவுமில்லாமலும் செய்கின்ற இந்த ஈனச் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கதும் தண்டனைக்குரிய குற்றமுமாகும்.

கண்டிமூடித்தனமான இச்செயற்பாட்டினால் நகரின் இவ்வாறான முக்கிய இடங்கள் மாசுபட்டு, துர்நாற்றம் வீசுவதுடன் மிக அசிங்கமாகவும் காட்சியளிக்கின்றன. மேலும், பிரதான வீதியினால் செல்கின்ற உள்ளூர், வெளியூர் பயணிகளுக்கு இவை அருவருப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் முழு நகரத்திற்கும் அவப்பெயர் ஏற்படுத்தப்படுகின்றது.

ஆகையினால், இச்செயற்பாட்டில் இருந்து சம்மந்தப்பட்டோர் உடனடியாக தவிர்ந்து கொள்ள வேண்டும். இன்று (19) தொடக்கம் இவ்விடங்களிலும் ஏனைய பொது இடங்களிலும் குப்பை போடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களைக் கண்டறிவதற்காக மாநகர சபை ஊழியர்கள் சிலர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன் சி.சி.ரி.வி. காட்சிகளும் பெறப்படவுள்ளன. இவ்வாறு கண்டறிப்படும் நபர்கள் உடனடியாக கைது செய்யப்படுவதுடன் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் மாநகர முதல்வர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதே வேளை, இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு ஊர் நலன் விரும்பிகளும் அமைப்புகளும் கரிசனையுடன் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முன்வர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

# குறிஞ்சாக்கேணி பிரதேசத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு முதலாவது டோஸ் ஏற்றும் பணி இன்று ஆரம்பமாகிறது

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

கொரோனா தடுப்பு மருந்து ஏற்றும் பணியில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு முதலாவது டோஸ் ஏற்றும் பணி இன்று இடம் பெறவுள்ளது. இதனால் அபாய நிலை கொண்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஏற்றப்படவுள்ளது இதனால் தாமதியாது பெற்றுக் கொள்ளுமாறு குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்.அஜீத் தெரிவித்தார்.

குறிஞ்சாங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் உரையாற்றுகையில் குறித்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இற்றை வரைக்கும் 200 க்கும் மேற்பட்ட கொரோனா தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்ட நிலையில் 20 க்கும் மேற்பட்ட மரணச் சம்பவங்கள் பதிவாகின கடந்த மாதமளவில் கூடுதலான மரணங்கள் பதிவாகியது இதனால் முற்காப்பு நடவடிக்கையாக மக்கள் இறுக்கமாக சுகாதார நடை முறைகளை பின்பற்ற வேண்டும் .

கொரோனாவில் இருந்து பாதுகாப்புப் பெற தொற்றா நோயாளர்களுக்கும் கடந்த வாரம் சைனோபாம் தடுப்பு மருந்து முதலாவது டோஸ் ஏற்றப்பட்டது இதன் முன்னுரிமை அடிப்படையில் 60 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கான முதலாவது டோஸ் ஏற்றப்பட்ட நிலையில் இரண்டாம் டோஸ் ஏற்றும் வரைக்கும் அவர்களும் முற்காப்பு நடவடிக்கைகளை தொடராக பெற்று வரவேண்டும் அப்படியாக இருந்தால் தான் சமூக தொற்று பரவலில் இருந்து பாதுகாப்புப் பெற முடியும். மொத்தமாக 718 நபர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

அரசின் வழிகாட்டலுக்கும் சுற்று நிரூபத்துக்கும் அமைய இந்த நடவடிக்கை இடம் பெற்று வருகிறது கர்ப்பம் தரித்து மூன்று மாதங்களுக்குள் அற்ற நிலை தவிர அபாய நிலை உட்பட கர்ப்பிணி தாய்மார்கள் முன்னுரிமை அடிப்படையில் கொவிட் தடுப்பூசியினை பெற முன்வாருங்கள் என்றார்.

# மிஹிந்தலை புனித பூமியில் அரச போசோன் விழா

## பிரதமர் உத்தரவு



சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய அரச பொசென் விழா மிஹிந்தலை ரஜ மஹாவிகாரரையை மையமாக கொண்டு உரிய மரியாதையுடன் ஏற்பாடு செய்யுமாறு புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிற்பகல் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

மிஹிந்தலை புனித பூமியில் நடைபெறும் அரச பொசென் விழா தொடர்பில் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இம்முறை அரச பொசென் விழாவை முன்னிட்டு பிரதான நிகழ்வு சிதுல்பவ்வ மற்றும் திஸ்ஸமஹாராம ரஜ மஹா விகாரையை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்படும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச பொசொன் விழாவை முன்னிட்டு மிஹிந்தலை சுற்றுவட்ட பாதையை புனரமைத்து தருமாறு மிஹிந்தலை ரஜமஹா விகாராதிபதி வணக்கத்திற்குரிய வளவாஹெங்குனவெவே தம்மரதன தேரர் கௌரவ பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார்.

அவரது கோரிக்கையை துரிதமாக நிறைவேற்றுமாறு பிரதமரினால் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் R.W.R. பேமசிறி அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

சிதுல்பவ்வ ரஜ மஹா விகாரை 2007ஆம் ஆண்டு புனித பூமியாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட போது ஏற்பட்ட பிழைகள் காரணமாக புனித பூமி ஒன்றுக்கு கிடைக்க வேண்டிய வசதிகள் வசதிகள் இன்றுவரை வழங்கப்படவில்லை என்று இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஆராய்ந்து அப்பிழைகளை நிவர்த்தி செய்யும் வகையில் சிதுல்பவ்வ ரஜ மஹா விகாரையை புனித பூமியாக மீண்டும் வர்த்தமானியில் அறிவிக்குமாறு கௌரவ பிரதமர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும் சிதுல்பவ்வ ரஜ மஹா விகாராதிபதி கலாநிதி மெடரம்ப ஹேமரதன தேரர் விகாரையின் சாலை அமைப்பை புனரமைப்பது தொடர்பில் திட்டமொன்றை முன்வைத்தார்.

அதற்கமைய யால தேசிய பூங்காவின் மத்தியில் அமைந்துள்ள சிதுல்பவ்வ ரஜ மஹா விகாரையின் குறித்த சாலை அமைப்பை சரளை இட்டு புனரமைக்குமாறு கௌரவ பிரதமரினால் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தினார்.

குறித்த சந்திப்பில் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, மஹிந்த அமரவீர, பாராளுமன்ற உறுப்பினர் உபுல் கலபத்தி, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் R.W.R.பேமசிறி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மன்னார் மாவட்டத்தில் 621 கோவிட் தொற்றாளர்கள்

**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்டத்தில் இவ் வருடம் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனையில் 604 பேர் கொவிட் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். நேற்று வெள்ளிக்கிழமை கிடைக்கப்பெற்ற பி.சீ.ஆர் பரிசோதனையில் 30 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டதைத் தொடர்ந்து இம் மாதம் (ஜூன்) 114 ஆக இவ் தொற்றாளர்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மன்னார் மாவட்டத்தில் கடந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில வெள்ளிக்கிழமை கிடைக்கப்பெற்றதில் 30 நபர்கள் கொவிட் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே பனங்கட்டுகொட்டு, எமில்நகர், வங்காலை, செம்மண்தீவு ஆகிய இடங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் உட்பட அகத்திமுறிப்பு. பூவரசன்குளம், காக்கையான்குளம், கோமரசன்குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர். பரிசோதனைகளுக்கு உட்பட்டவர்களிடமிருந்தே இவ் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் 621 தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இவ்வாண்டு 604 பேர் இவ் தொற்று நோய்க்கு உள்ளாகியுள்ளனர். இவ் வருடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொற்றாளர்களில் 481 நபர்கள் சமூகத்திலிருந்தும், 123 நபர்கள் மன்னார் பொது வைத்தியசாலை மூலமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இவ் நடப்பு மாதமாகிய ஜூன் மாதம் மட்டும் 114 பேர் இவ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் (ஜூன்) 2933 பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 19952 பீ.சீ.ஆர் பரிசோதனைகள் இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் வெள்ளிக்கிழமை (18) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்பு தலைமன்னார் பியரில் கடற்கரையில் நின்ற 290 மீனவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர். பரிசோனையில் வியாழக்கிழமை (1%.06.2021) சிலரின் முடிவுகள் கிடைக்கப்பெற்று இருந்தன. இவர்களில் 17 மீனவர்களுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட கொவிட் தொற்றாளர்களில் பெண்களை மன்னார் தாராபுரம் இடைதங்கள் சிகிச்சை முகாமுக்கும் ஆண்களை வவுனியாவுக்கும் அனுப்பிவைப்பதற்கான எற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார்.

# நடமாட்ட தடையால் முடங்கியுள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள்





**(ரக்ஸனா)**

கொவிட் 19 காரணமாக அமுலிலுள்ள நடமாட்டத் தடை காரணமாக அன்றாடம் நாட்கூலி வேலைசெய்து அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் தமது குடும்பங்களைப் பாதுகாத்துவரும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அங்கலாய்க்கின்றனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட தேத்தாதீவு கிராமத்தின் குடியிருப்பு, களுவாஞ்சிகுடி கிராமத்தின் சூரியபுரம், உள்ளிட்ட பகுதிகளில் நாட் கூலி வேலை செய்யும் 300 குடும்பங்களுக்கு நேற்று வெள்ளிக்கிழமை(18) மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் சமூக சேவையாளர், மே.வினோராஜ் அவர்களின் சொந்த நிதியில் அரிசி, உப்பு என உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைத்துள்ளார்.

மக்கள் இவ்வாறு அவ்வப்போத இன்னலுறும்போது எமது நிலமை அறிந்து தாமாக முன்வந்து மனமுவந்த காலடிக்கே கொண்டுவந்து உலர் உணவுப் பொருட்களை வழங்கிய மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ் அவர்களுக்கு அப்பகுதி மக்கள நன்றிளைத் தெரிவித்துள்ளனர்.

# பாடசாலை வீதி வடிகாண் அமைக்கும் பணி



**(ந.குகதர்சன்)**


நாட்டில் பயணத்தடை அமுலில் உள்ள போதும் ஜனாதிபதியின் வழிகாட்டலில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் இடம் பெற்று வருகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் சுபீட்சத்தின் நோக்கத்திற்கமைய நாட்டில் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் கிராமிய வீதிகள் மற்றும் வடிகாண் அமைக்கும் பணிகள் வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காவத்தமுனை படசாலை வீதியில் வடிகாண் அமைக்கும் வேலைத் திட்டம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 15.75 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் மூலம் காவத்தமுனை படசாலை வீதியில் 75 மீற்றர் அளவுடைய வடிகாண் அமைக்கும் பணிகள் பயணத்தடை காலத்திலும் இடம்பெற்று வருகின்றது.

# கார்- மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து



**(மட்டு மாவட்ட நிருபர்)**

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி, தாழங்குடா ஆடைத்தொழிற்சாலை முன்பாக நேற்று மாலை 5 மணியளவில் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் கார் பலத்த சேதமடைந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி மோட்டார் போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடு தேடிச் சென்று நிவாரணம் வழங்கி வரும் முஷாரப் எம்.பி.



கொவிட் -19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நடவடிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரபின் வழிகாட்டலிலும், பங்களிப்பிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரபினால் ஆரம்பிக்கப்பட்ட அனர்த்த நிவாரண நிதியத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்த நிவாரணம் வழங்கும் நடவடிக்கை செயற்திட்டம் அம்பாறை மாவட்டத்தில் கொவிட் 19 பெருந்தொற்றின் மூன்றாம் அலையில் பாதிக்கப்பட்டு அவதிப்படும் மிக வறிய குடும்பங்களுக்கு வழங்கி வருகின்றார்.

தேசிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (நுஜா) தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ். எம்.அறூஸின் வேண்டுகோளுக்கு அமைவாக, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக முதலாம் கட்ட நிவாரணப் பொதிகள் நேற்று (18) பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் வை.எல். நியாஸ், காரியால உத்தியோகத்தர் ஜஸ்வத் இலாஹி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு இந்த நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

# நீண்ட காலமாக சிதைந்திருந்த கல்முனை பொது மயான மதில் புனரமைப்பதற்கு நடவடிக்கை



**(பாறுக் ஷிஹான்)**

நீண்ட காலமாக சிதைந்திருந்த கல்முனை பொது மயான மதில் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில் உள்ள தமிழ் இளைஞர் ஒன்றியம் விடுத்த கோரிக்கைக்கு அமைய சுமார் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் ஏ.நிமலன் தெரிவித்தார்.

குறித்த கல்முனை பொது மயான மதிலை புனரமைப்பு செய்வதற்கான கண்காணிப்பு விஜயம் ஒன்றினை நேற்று (18) கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி மாகாண பணிப்பாளர் நா.தனஞ்ஜெயன் மற்றும் தமிழ் இளைஞர் ஒன்றிய பிரதிநிதிகள் இணைந்து மேற்கொண்டு பார்வையிட்டனர்.

குறித்த மதிலானது 250 வருடங்களுக்கு மேற்பட்ட பழமையானதாக காணப்பட்டதுடன் கடந்த 12.02.2021 அன்று இடம்பெற்ற ஒன்றியத்தின் கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்தின் படி கிழக்கு மாகாண கிராமஅபிவிருத்தி மாகாண பணிப்பாளர் நா.தனஞ்ஜெயனிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் இத்திட்டம் நிறைவேற ஆதரவளித்த கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர் ஜெ.அதிசயராஜ் பொறியியலாளர் கென்றி அமல்ராஜ் துறைசார் திணைக்கள உத்தியொகத்தர்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கல்முனை சனிமௌன்ட் விளையாட்டு கழக ஏற்பாட்டில் நிவாரணப்பணி!



**(நூருல் ஹுதா உமர்)**

நாட்டில் வேகமாக பரவிவரும் கொரோனா அலையை கட்டுப்படுத்த அரசினால் முன்மொழியப்பட்டிருக்கும் பயணத்தடை காரணமாக அன்றாட வாழ்வாதாரத்தை இழந்த மற்றும் நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கும் கழக வீரர்களுக்கும் உலருணவுகள் வழங்கும் நிகழ்வு கல்முனை சனிமௌன்ட் விளையாட்டுக்கழக ஏற்பாட்டில் நேற்று (18) மாலை கல்முனையில் நடைபெற்றது.

கல்முனை சனிமௌன்ட் விளையாட்டுக்கழக தலைவர் ஏ.எல்.ஏ காதர் தலைமையில் நடைபெற்ற மூன்றறை இலட்சம் பெறுமதியான இந்த உலருணவுகள் வழங்கும் நிகழ்வில் கழக தவிசாளர் முனைமருதவன் எம்.எச். எம். இப்ராஹிம், கல்முனை மாநகர சபை உறுப்பினரும், கழக பொதுச் செயலாளருமான எம்.எச்.எம்.அப்துல் மனாப், பொருளாளர் எம்.எஸ்.எம். பாரூக், கழக இணைப்பாளர் எம்.எச்.எம்.எச்.எம். அக்கில் உட்பட பலரும் கலந்துகொண்டு தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலருணவுப்பொதிகளை இதன்போது வழங்கி வைத்தனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா சிகிச்சை நிலையங்களை அதிகரியுங்கள்

## : முன்னாள் அமைச்சர் சுபைர் ஆளுநரிடம் வேண்டுகோள்

**(ஏ.எல்.றியாஸ்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தாக்கம் அதிகரித்து வருவதனால், பெண்கள் மற்றும் சிறுவர்கள் சிகிச்சை பெறுவதற்காக, மேலும் கொரோனா சிகிச்சை நிலையங்களை மாவட்டத்தில் நிறுவுமாறு கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் கிழக்கு மாகாண ஆளுநரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைர் (18) குறிப்பிடுகையில்,



கொரோனா வைரஸின் தீவிர பரவலினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பல உயிரிழப்புக்களும் நிகழ்ந்துள்ளது. இதனால் மக்கள் சொல்லொன்னா துயரங்களை அனுபவித்துவரும் நிலையில், இதன் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இக்கொடிய வைரஸிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கும் பொருட்டு, அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக, கொரோனா தொற்றாளர்களுடைய எண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால், அம்மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை நிலையங்களிலும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இனங்கானப்படுகின்ற நோயாளர்களை சிகிச்சைகளுக்காக வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்ல வேண்டியதொரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

கொரோனா தாக்கத்தினால் ஏறாவூர் பிரதேசத்திலும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்களை திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி மற்றும் கோமரங்கடவெல பிரதேசங்களில் அமைந்துள்ள கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு கொண்டு செல்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொரோனா சிகிச்சை நிலையங்களில் இடவசதியின்மை காரணமாகவே இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் பெண்கள் மற்றும் சிறுவர்களை மேற்குறித்த வெளிமாவட்ட சிகிச்சை நிலையங்களுக்கு கொண்டு செல்வதனால், அவர்கள் அச்சத்துடன் செல்வதாகவும், மொழி ரீதியாக பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குவதாகவும் அறியக்கிடைத்துள்ளது. குறிப்பாக, மாவட்டம் தாண்டி செல்லும் நோயாளர்கள் உள ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர் - என்றார்.

# அக்கரைப்பற்று பிரதேசமட்ட கொவிட் 19 கட்டுப்பாட்டு குழுக்கூட்டம்



**(நூருல் ஹுதா உமர்)**

அக்கரைப்பற்று பிரதேச மட்ட கொவிட் 19 கட்டுப்பாட்டு குழுக்கூட்டம் வியாழக்கிழமை அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். எப்.எம்.ஏ.காதர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது

அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி, அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. றாஸிக், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர், பொலிஸ் உயரதிகாரி மற்றும் பாதுகாப்பு படையின் 49 வது படைப்பிரிவின் உயர் அதிகாரிகள், பள்ளிவாசல்கள் சம்மேளன பிரதிநிதி வர்த்தக சங்க பிரதிநிதி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டு நாடு தழுவிய ரீதியில் கொரோனா பெரும் தொற்று அதிகரித்து காணப்படும் இச்சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாணமும் வெகுவாக பாதித்து வருகிறது.

அதன் விளைவாக அக்கரைப்பற்று பிராந்தியத்தில் கோவிட் 19 அபாயத்தில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் சுகாதார வழிமுறைகள் பற்றி இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டு முக்கிய தீர்மானங்கள் சில எடுக்கப்பட்டது.

# ஜோர்ஜ் கபிரியேல்!

அழகு குணசீலன்

## ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை !

**வாகரை!**

மட்டக்களப்பு தமிழகத்தின் வடக்கே ஒரு குக்கிராமம் மட்டுமல்ல பண்டைத் தமிழர் வரலாற்றின் சாட்சியமும் கூட. கடந்த வாரத்தில் உலகத் தமிழர் மத்தியிலும், சர்வதேச அரசியலிலும் பேசப்பட்ட ஒரு கிராமம். தான் பிறந்த அந்த மண்ணை சர்வதேச பேசுபொருளாக்கிய பெருமைக்குரியவர் ஜோர்ஜ் கபிரியேல் என்ற அந்த மண்ணின் மைந்தன்.

இந்த பத்தியை எழுதத் தூண்டியது ஜோர்ஜ் வாகரையில் இருந்து வெள்ளை மாளிகை வரை படைத்த வரலாற்று சாதனை எனினும், எனக்கும் கபிரியேல் ஐயா குடும்பத்திற்கும் இருந்த எள்ளளவான தொடர்பும், மட்டக்களப்பின் படுவான்கரையின் மற்றொரு மூலையில் அமைந்திருந்த நான் பிறந்த முனைக்காடு குக்கிராமத்திற்கும் கபிரியேல் ஐயாவுக்கும் உள்ள தொடர்பும் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

1960களின் இறுதி ஆண்டுகள் அவை. முனைக்காடு மெ.மி.த.க. பாடசாலையின் அதிபர் ஓய்வு பெற்று செல்கிறார். பாடசாலைக்கு புதிய அதிபர் ஒருவர் வருகிறார். அவர்தான் ஜோர்ஜின் தந்தை கபிரியேல் ஐயா. நல்ல உயரம், பஞ்சு மெத்தை தலைமுடி, வெள்ளை வேட்டி, வாலாமணி அனேகமான அன்றைய ஆசிரிய அடையாளம்.

இத்தனைக்கும் தமிழ் ஆசிரியன் அல்ல. ஆங்கில ஆசிரியன். ஆங்கில மொழிவளம் வற்றாத நதியாய் சலசலத்து பாயும். அப்போதுதான் கல்வியின் அர்த்தத்தை முனைக்காடு புரிந்துகொண்டு கண்களைத் திறந்து கொண்டது.

உடல், உளம், மூளையை ஒருங்கிணைத்த முழுமைப் படுத்தப்பட்ட கல்வி.

வழமையான வகுப்புக்கல்வி, பாடசாலை முடிந்த பின் வீட்டுவேலையும், மேலதிக ஆங்கில வகுப்பும், இன்னும் மாலையில் கலைப்பயணம். வசந்தன், கும்பி, கோலாட்டம். கிராமத்தின் சிந்தாத்துரை ஐயாவும், சிவசம்பு ஐயாவும் கபிரியேல் ஐயாவின் கலைக்கல்விக்கு உறுதுணையாக இருந்தார்கள். பாடசாலைக்கு வருகைதராத மாணவர்களின் வீடுகளுக்கு எங்களையும் அழைத்துக்கொண்டு செல்வார். பெற்றோரோடு பேசுவார். பிள்ளைகள் வருகை தராத காரணத்தை கேட்டறிந்து தீர்வு காண்பார். இரவில் குப்பி விளக்கில் இரவுப்படிப்பு இடம்பெறும். படிப்பு முடிந்த பின்னர் நாங்கள் ஆண் மாணவர்கள் அவரோடு பள்ளியிலேயே தங்கிவிடுவோம்.

இத்தனைக்கும் கல்குடா தொகுதியின் அன்றைய அரசியல்வாதி அவரை தண்ணியில்லாத ஊருக்கு - முனைக்காட்டிற்கு அரசியல் இடமாற்றம் செய்திருந்தார். ஆனாலும் அவர் தன் கல்விப்பணியில் எந்த சோர்வையும் காட்டவில்லை. சம காலத்தில் மட்டக்களப்பு மாவட்ட பிரயாணிகள் சங்கத் தலைவராகவும் இருந்தார். பின்னர் அவர் பன்குடாவெளி பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்ற பின், கல்குடா தொகுதியில் சுயேட்சை வேட்பாளராகப் பொதுத்தேர்தலில் போட்டியிட்ட போதும் வெற்றி வாய்ப்பு கிடைக்கவில்லை.

அதிகாலை எழுந்து உடற்பயிற்சி முடித்து அதற்குப் பின் வீடு சென்று மீண்டும் வருவோம். பாடசாலை தொடங்கும். வெள்ளிக்கிழமை வாகரைக்குப் போவார், ஞாயிறு மாலை திரும்புவார். அவரை அழைத்து வருவதற்கு ஞாயிறு மாலை தோறும் சுமார் இரு மைல்கள் கால்நடையாக மண்முனைத் துறையடிக்கு சென்று அழைத்து வருவோம். மீண்டும் இரு மைல்கள் எங்களோடு சேர்ந்து நடப்பார்.

வார இறுதியிலும், பாடசாலை விடுமுறையிலும் மட்டும்தான் நாங்கள் வீட்டில். கபிரியேல் ஐயா எங்களுக்கு தாயாகவும், தகப்பனாகவும் இருந்தார். பாடசாலை விடுமுறைக்காலத்தில் நான் பல தடவைகள் வாகரைக்கு சென்றிருக்கிறேன். அதனால் அவரின் குடும்பத்தினரை அறிந்திருக்கிறேன். அந்த நாட்களில் ஜோர்ஜ்ஜை சந்திக்கின்ற வாய்ப்பும் எனக்கு கிடைத்தது.

தந்தை மகற்காற்றும் உதவி தன் மகனை அவையத்து முந்தி இருக்கச் செயல். கபிரியேல் ஐயா தனது பிள்ளைகளுக்காக மட்டும் இந்த குறளை வரையறுத்துக் கொள்ளவில்லை. ஆயிரக்கணக்கான கிராமிய மாணவர்களை அவையில் முந்தி இருக்கச் செய்திருக்கிறார். அவர் முனைக்காட்டில் இட்ட விதை அப்பாடசாலையை தேசிய மட்டத்திலான ஒரு விருட்சமாக இன்று உயர்த்தி இருக்கிறது.

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல்லெனும் சொல். ஜோர்ஜ் கபிரியேல் அதிவிசேடமான வகையில் தந்தைக்கு இந்த மதிப்பையும் மரியாதையையும் வழங்கியிருக்கிறார். அவரது ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கும் அவர் ஒரு கல்வித்தந்தையாக இருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஊரார் பிள்ளைக்கு கல்வியூட்டினால் உன் பிள்ளை தானாக கற்கும் என்பார்கள். கபிரியேல் ஐயாவின் ஆசிரிய வாழ்விலும், ஜோர்ஜ்ஜின் இன்றைய வளர்ச்சியிலும் இது முற்றிலும் உண்மை.

### PRESIDENT FELLOWSHIPS PROGRAMM:

இந்த நிபுணத்துவ புலமைப் பயிற்சி திட்டம் 1964 இல் ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஃநுமீஈநூமீ ஆ. ஒநூஏமீகுநூமீ இதனை ஆரம்பித்தார். அமெரிக்காவில் பல்வேறு புலமை ஊக்குவிப்புத் திட்டங்கள் உள்ள போதும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் அதிமுக்கியத்துவம் கொண்ட சமஸ்டி அரச திட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. தலைமைத்துவம், பொதுச்சேவை, ஆளுமை, அனுவம் நிபுணத்துவம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த ஜனாதிபதியின் தேசியத் திட்டம் இது.

ஒவ்வொரு ஆண்டிலும் இந்த புலமைப் பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அமெரிக்க தலைமைத்துவத்திற்கு புடம் போடப்படுகிறார்கள். ஒரு வகையில் இது அமெரிக்க கருத்தியலை உட்பாய்ச்சுகின்ற மூளைச்சலவை. அந்த வகையில் இந்த ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட இருபத்தியிரண்டு பேரில் கலாநிதி ஜோர்ஜ் கபிரியேல் ஒருவராக ஜனாதிபதிபதி ஆணைக்குழுவால் 04.06.21இல் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பரந்தளவான பின்னணி அறிவியல், நிறைந்த அனுபவம், அதிவிசேட தொழில்சார் தகுதி என்பவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கி இத்தேர்வு இடம்பெறுகிறது. அந்த வகையில் ஒரு இலங்கை அமெரிக்கருக்கு, அதுவும் மட்டக்களப்பு மண்ணின் சமூக, பொருளாதார, அரசியலில் பின் தங்கிய வாகரைக்கிராமத்தின் மண்ணின் மைந்தனுக்கு கிடைத்திருக்கின்ற இந்த வாய்ப்பு ஒரு வரலாற்றைப் பதிவு செய்கிறது.



இந்த வரலாற்றை ஜோர்ஜ் கபிரியேல் எழுதியிருக்கிறார் என்பது மட்டக்களப்பு மண்ணுக்கு கிடைத்த பெருமை மட்டுமன்றி, முழு இலங்கைத்தீவுக்கும் கிடைத்திருக்கின்ற பெருமையாகும்.

அமெரிக்காவை வேறுபட்ட பன்மைத்தன்மை ஆளுமை ஊடாக ஒரு பலமான நாடாக்குதல் என்பது இதன் அடிப்படை. இவர்கள் பயிற்சிக்குப் பின் வெள்ளை மாளிகை நிர்வாகத்தில், அமெரிக்க மத்திய சமஷ்டி நிர்வாகத்தில் தலைமைத்துவம் ஏற்று செயற்படுகின்ற அதி உயர் சமஷ்டி அதிகாரிகளாக இருப்பார்கள். இதற்கு ஜோர்ஜ் கபிரியேல் அவர்களின் நாற்பதாண்டுகால ஆய்வு அனுபவமும், இருநாட்டு சமூக, பொருளாதார, அரசியல் அனுபவமும் பெரும் பங்களிப்பைச் செய்யும் என்று பைடனின் வெள்ளை மாளிகை நிர்வாகம் எதிர்பார்க்கின்றது.

இவர்கள் அமெரிக்க கட்சி அரசியலுக்கு அப்பால் வெள்ளை மாளிகையில் ஜனநாயகக் கட்சியின் ஜோ பைடன் நிர்வாகத்திலும், அமெரிக்க காங்கிரஸில் குடியரசு, ஜனநாயக தரப்பினருடனும் அமெரிக்க நலனை முதன்மைப்படுத்திய பொதுச்சேவை தலைமைத்துவ அதி உயர் அதிகாரிகளாக இருப்பார்கள்.

இது பின்கதவால் இடம்பெறும் அரசியல் நியமனம் அல்ல. பகிரங்கமாக விண்ணப்பம் கோரப்பட்டு தேர்வு இடம்பெறுகிறது. விண்ணப்பிப்பவர்கள் ஆகக் குறைந்தது பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்கவேண்டும்.

1. விண்ணப்பதாரி அமெரிக்க பிரஜையாக இருக்க வேண்டும்.

2. மத்திய சமஷ்டி அரசாங்கத்தில் வேலை செய்த அனுபவம் அல்லது முப்படைகளில் கடமையாற்றிய அனுபவம் தேவை.

3. ஆகக்குறைந்தது பல்கலைக்கழக இளமானி பட்டம்.

4. வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படுவதில்லை ஏனெனில் அனுபவம் இங்கு முக்கிய தகுதியாக கொள்ளப்படுகிறது.

5. விண்ணப்பத்துடன் மூன்று கீஉஊஉகீஉமீஇஉநபர்கள் பெயர் குறிப்பிடப்படவேண்டும். இவர்களில் ஒருவர் விண்ணப்பதாரியின் தொழில்துறை நிபுணத்துவம் சார்ந்தவர், ஒருவர் விண்ணப்பதாரியின் பூர்வீக சமுதாய அறிவுசார்ந்தவராக, மற்றையவர் விண்ணப்பதாரியின் தற்போதைய தொழில் துறை சார்ந்தவராக இருக்கவேண்டும்.

சராசரியாக ஆயிரம் விண்ணப்பங்களில் இருந்து வருடாவருடம் பதினொன்று முதல் பத்தொன்பது பேர் தெரிவுசெய்யப்படுவர். இம்முறை இருபத்தி இரண்டு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயிற்சிக் காலம் முடிந்த பின்னர் வெள்ளை மாளிகை சிரேஷ்ட நிர்வாகியாக, அமைச்சுகளின் செயலாளர்களாக, அல்லது சமஸ்டி அரசாங்கத்தின் அதி உயர் அதிகாரிகளாக நியமனம் பெறுவர்.

கடந்த 55 ஆண்டுகளில் தேர்வு செய்யப்பட்ட 816 பேரில் இன்னும் 763 பேர் உயிருடன் இருக்கின்றனர். இது வரையில் தேர்வு செய்யப்பட்டவர்களில் அதிகமானவர்கள் ஆபிரிக்க அமெரிக்கர்கள். இரண்டாவது இடத்தில் ஆசிய அமெரிக்கர்களும், மூன்றாவது இடத்தில் தென்னமெரிக்க அமெரிக்கர்களும், நான்காவது இடத்தில் அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவர்களும் உள்ளனர்.

ஆசியா இரண்டாவது இடத்தில் உள்ளபோதும் இலங்கையர் ஒருவருக்கு அதுவும் ஒரு மட்டகளப்பாருக்கு கிடைத்திருப்பது எம் எல்லோருக்கும் பெருமையைத் தருகிறது. இத்திட்டம் வெளிநாடுகளின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வியல் தத்துவங்களை புரிந்து கொண்டு உலக வல்லரசு ஒன்று தனது ஆதிக்க அரசியலை விரிவுபடுத்துவதற்கான ஒரு திட்டம் என்பது இப்போது உங்களுக்கு புரிந்திருக்கும்.

### தென்கிழக்காசிய நெருக்கடியும், ஜோர்ஜ் கபிரியேலின் தெரிவும்

அமெரிக்க ஜோ பைடன் - கமலா ஹரிஷ் நிர்வாகத்திற்கு தென்கிழக்காசிய சமகால நெருக்கடிகளை கையாள்வதற்கு ஒருவர் தேவை. பிராந்திய பொருளாதார, அரசியலை மட்டுமன்றி சமூக விழுமியங்கள், மக்களின் வாழ்வியல் தத்துவங்கள், மதகோட்பாட்டு





பெறுமதிகள், அதன் பின்னால் உள்ள உளவியல் என்பனவற்றை நன்கறிந்தவராக அவர் இருக்க வேண்டும். அந்த விழுமியங்களில் பிறந்து வளர்ந்த, அதேவேளை அமெரிக்க அரசியல் உளவியலை அறிந்தவரும், அந்த இடைவெளியை நிரப்பக் கூடியவருமாக ஜோர்ஜ் கபிரியேல் உள்ளார் என்பதுதான் இந்த நியமனத்தின் முக்கியத்துவம்.

தென்கிழக்காசிய பிராந்தியத்தில் சீனா, இந்தியாவின் ஆதிக்கம் அதிகரிக்கிறது. சர்வதேச எதிர்பார்ப்புக்களை மீறி மியான்மார் இராணுவ ஆட்சி தொடர்கிறது. கொங்கொங் விவகாரத்தில் சீனா கடுமையான போக்கை கொண்டுள்ளது. இந்தியா பசுபிக் பிராந்திய ஒத்துழைப்பு என்ற அமைப்பின் தோற்றத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

சீனாவின் பட்டுவீதி விரிவாக்கம் தொடர்கிறது. சீனா பசுபிக் பிராந்திய ஒத்துழைப்பு கூட்டமைப்புக்கு தலைமை தாங்குகிறது.

இந்த அனைத்து விவகாரங்களிலும் இந்து சமுத்திர - அரபுக்கடல் பிராந்தியத்தில் இலங்கையின் அமைவிடம் அதி முக்கிய இடத்தை வகிக்கிறது. எனவே இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட ஒருவரின் ஊடாக, பொதுவாக பிராந்தியத்திற்கும் சிறப்பாக இலங்கைக்கும் பொருத்தமான ஒரு அமெரிக்க அணுகுமுறை கொள்கை வகுப்பில் தேவையாக உள்ளது.

இலங்கைக்கு கொடுக்கப்படுகின்ற அமெரிக்க அழுத்தம் என்பது மறைமுகமாக சீனாவுக்கு கொடுக்கப்படுகின்ற அழுத்தம். ஐ.நா.வின் மனித உரிமைகள் தொடர்பான பிரேரணைகள், இந்திய இலங்கை உறவில் ஏற்பட்டுள்ள வெடிப்பு, போர்ட் சிட்டி விவகாரம், உள்ளிட்ட பிராந்திய அழுத்தங்கள் மட்டும்தான் என்று சொல்வதற்கில்லை.

அமெரிக்க காங்கிரஸில் தமிழீழம் குறித்த பிரேரணை, ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் நிறைவேற்றிய இலங்கை பயங்கரவாத சட்டம் குறித்த பிரேரணை, ரணிலின் பாராளுமன்ற பிரவேசம் எல்லாம் சோழியன் குடும்பி சும்மா ஆடவில்லை என்பதற்கான ஆதாரங்கள்.

இலங்கைக்கு இந்தியாவை விடவும் சீனா முக்கிய கூட்டாளியானது ஏன்..?

சர்வதேச விவகாரங்களில் இந்தியாவால் இலங்கையைக் காப்பாற்ற முடியாது. வீட்டோ அதிகாரம் கொண்ட சீனாவும், ரஷ்யாவும் தான் காப்பாற்ற முடியும். இதை அமெரிக்கா நன்கு புரிந்து வைத்துள்ளது.

இந்த அசாதாரண கொரோனா சூழலில் தமிழ்தரப்புக்கு சாதகம் போன்ற தீர்மானங்களை நிறைவேற்றி தமிழ் - சிங்கள உறவை சிதைத்தல், பயங்கரவாத சட்டத்தை தளர்த்த வேண்டும் என்ற அழுத்தத்தின் ஊடாக சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க முடியாத சூழலை ஏற்படுத்தி பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான நம்பிக்கையை சீர்குலைத்தல், இந்தியாவுடன் இணைந்து போர்ட் சிட்டி விவகாரத்தை தென் இலங்கையில் அரசியலாக்கல் என்பனவற்றின் மூலம் அமைதியின்மையை ஏற்படுத்தி ராஜபக்சே அரசாங்கத்தை பதவியில் இருந்து அகற்றுதல்.

இதனால் இலங்கையில் நிலவும் அரசியல் ஸ்திரத்தன்மையை தளம்பச்செய்து சீனா உள்ளிட்ட சர்வதேச முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் முதலீடு செய்யக்கூடிய ஸ்த்திரத்தன்மை இல்லை என்று பிரச்சாரம் செய்து நேரடியாக இலங்கை மீதும் மறைமுகமாக சீனாமீதும் பொருளாதார அழுத்தத்தை அதிகரித்தல்.

இந்த விடயங்கள் இரவோடிரவாக இன்றைக்கிருந்து நாளை நடப்பவை அல்ல. இது ஒரு நீண்ட கால அணுகுமுறை. எதிர்வரும் ஒரு வருடகாலத்தில் ஜோர்ஜ் கபிரியேல் இந்த அணுகுமுறைக்குள் உள்வாங்கப்படாவிட்டாலும் அதற்கான பயிற்சிகளை பெற்றுக் கொள்வார். அதற்குப் பின்னர் அவரின் பங்கு இந்த பிராந்திய அமெரிக்க அரசியல் தீர்மானங்களில் முக்கியத்துவம் பெறும் என்பதை மறுப்பது கடினமானது.

இது ஜோர்ஜ் கபிரியேல் மீதான விமர்சனம் அல்ல அமெரிக்க ஆதிக்க போட்டி அரசியல் மீதான விமர்சனம். ஜோர்ஜ் அல்ல வேறு எவர் இந்த இடத்தில் இருந்தாலும் அதைச் செய்யவேண்டிய கடமையும் பொறுப்பும் அவர்களுக்கு உண்டு.

எது எவ்வாறாயினும் அமெரிக்க அரசியல் மீதான காலக்கண்ணாடியின் அனைத்து விமர்சனங்களுக்கும் அப்பால் கலாநிதி ஜோர்ஜ் கபிரியேல் அவர்களின் இந்த நியமனத்தையும், கிடைத்துள்ள வாய்ப்பையும் இலங்கையர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஏனெனில் அமெரிக்க கொள்கை வகுப்பில் அவரும் ஒருவரேயன்றி அவர்தான் முற்றுமுழுதான கொள்கை வகுப்பாளர் அல்ல, நாம் அவரை குற்றம் சாட்டுவதற்கு.

இதுதான் கொழும்பு அரசியலில் உள்ள தமிழ் கொள்கை வகுப்பாளர்களின் நிலையும். அரசாங்கத்தின் கொள்கையை நிறைவேற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் அதிகாரிகள் என்ற வகையில் அவர்களுக்கு உள்ளது அதுதான் ஜதார்த்தம்.

**ஆக, பெருமை கொள்கிறாள் ..,**
**சான்றோன் எனக்கேட்ட தாய்!**

**வாழ்த்துக்கள் கலாநிதி**
**ஜோர்ஜ் கபிரியேல்**
**அவர்களே!**

**மட்டுநகர் அன்னை வாழ்த்துகிறாள்**

**நன்றி அரங்கம் பத்திரிக்கை.**

சிறுகதை






# கொரோனா பெயரில் ஓர் அர்ச்சனை

கோவிலூர் செல்வராஜன்

'மிக நீண்ட காலத்திற்கு பின்னர் இயற்கை தனது இயல்பு வாழ்க்கையை, இந்த கொரோனா வைரசின் வருகையால்தான் சில மாதங்களாக பெற்றிருக்கிறது.மனிதகுலத்தின் வக்கிரங்களாலும்,அண்டைவெளியில் நடைபெற்ற அழிச்சாட்டியங்களாலும் இயற்கை தனது சுயத்தை இழந்திருந்தது. இப்போது நிலம்,கடல்



,காற்று,ஆகாயம் என்று தனது அம்சங்களில் அது மாற்றத்தையும்,புதிய தோற்றத்தையும் காண்கிறது.மனிதகுலம் இப்போது மண்டியிட்டு இருக்கிறது.கொரோனா கொடுத்த அடி, பெருமடியாக விழுந்திருக்கிறது.

கொரோனா வைரஸ் சீனாவில் வௌவாலிலிருந்துதோ அல்லது வேறு உயிரினத்திலிருந்தோ, தோன்றியதா அல்லது செயற்கையாக ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்டதா என்பது கேள்விக்கும்,ஆய்வுக்கும் உரியது.'

இப்படியாக தனக்கு வட்சப்பில் வந்த ஒரு செய்திக் குறிப்பை படித்துக்கொண்டு இருந்தார் ஐரோப்பிய நாடு ஒன்றில் பிள்ளையார் கோவில் ஒன்றை நிறுவி அதில் அர்ச்சகராகவும் தலைமை நிர்வாகியாகவும் இருக்கும் சுந்தரசர்மா அவர்கள். கோவிட் 19 வைரசின் தொற்று உலகம் முழுதும் பரவி இருப்பதால் அனைத்து மதங்களின் வணக்கதலங்களும் பொதுமக்களின் வரவை முடக்கி உள்ளன.சுந்தரசர்மா கோவிலும் அப்படியே முடக்கப்பட்டுள்ளது.அவர் மட்டும் தனிமையில் கோவிலுக்குள் சென்று பிள்ளையாருக்கு பூசை செய்து வருகிறார்.

அடியார்கள் வராததனால் விஷேட பூசைகளோ,அபிஷேகங்களோ,அர்ச்சனைகளோ இல்லை. இதனால் கோயிலுக்கு வருமானம் கிடையாது.சுந்தரசர்மா வீடுகளுக்கு சென்று நடத்துகின்ற தொடக்கு கழிப்பு,சாந்தி செய்தல்,மற்றும் சடங்குகள் கூட இப்போது இல்லை. இந்த வருமானங்கள் இல்லாத சூழ்நிலையில் என்ன செய்வதென்றே தெரியாமல் தனது போனை பார்த்து கொண்டு இருந்தார்.அந்தநேரத்தில் அவர் பாரியார் வந்து பேசினார்.

''என்னங்க இப்படியே போனால் எப்படியிங்க கோவிலை நடத்துறது,நம்மட வாழ்க்கையை எப்படி ஓட்டுறது?மூன்று மாதங்களாக நம்மகிட்ட இருந்ததை வைச்சி ஒருமாதிரி எல்லாவற்றையும் சரிக்கட்டினோம். இப்போ எங்கட வீட்டுக்கே சாமான் சக்கட்டுகள் வாங்க பணம் பற்றாமல் இருக்கே என்னங்க பண்ணுறது''.

''அதுதான் அம்புஜம் நானும் காலையில் எழுந்ததிலிருந்து யோசனை செய்துகொண்டு இருக்கிறன்.கணபதியான் கண்ணைத்திறக்க வேண்டும்.ஏதாவது ஒரு வழி பண்ணினால்த்தான் காசைப் பார்க்கலாம் கண்டியோ''

''நாங்க மாதந்தோறும் ஊருக்கு மகளின்ர வீடுகட்ட அனுப்புற காசும்கூட மூன்றுமாதமாக அனுப்பயில்லை .அங்கேயும் ஊரடங்கு என்றபடியால் வேலைகள் ஒன்றும் நடக்கயில்லை அதனால் பரவாயில்லை.ஆனால் அங்கு எல்லாம் சரி என்றால் கண்டிப்பாக வேலை தொடங்கிடுவினம் அப்போ பணம் அனுப்பியே ஆக வேண்டும்''.

''அது எனக்கு தெரியாமல் இல்ல அம்புஜம்.இன்றைக்கு ஏதாவது செய்து பணத்துக்கு ஏற்பாடு பண்ணியே ஆகவேணும்.நீ போய் உன்ர சமையல் வேலையை பாரும்.நான் ஒரு வழி பார்க்கிறேன்'' என்றவர் சிந்திக்கலானார்.சற்று நேரம் யோசித்துவிட்டு,முகத்தில் ஒரு புன்முறுவலுடன் தனது கைபேசியை எடுத்து அதை தடவிப்பார்த்து பின்னர் அழுத்திவிட்டு சத்தம் கேட்கும்படி வைத்துகொண்டார்.

''ஹலோ ஆதவன் ஸ்ரோஸ் பிரகாஷ் ஹியர். யார் கதைக்கிறீங்க''

''ஹலோ பிரகாஸ் நான் பிள்ளையார்கோவில் சுந்தரசர்மா பேசுறன்''

''ஆ ஐயாவே சொல்லுங்க ஐயா.எப்படி இருக்கிறியள் .எங்கையா கோவில் பக்கமும் வரமுடியாத நிலையாய் போச்சுது உந்த கொரோனா வந்து ரெண்டு மாதமா கடையும் திறக்கமுடியல.இண்டைக்கு சனிகிழமை என்று வந்து இப்பதான் திறந்து வச்சிருக்கிறான்.சனம் ஒருத்தரும் வாறதா தெரியல்ல.வழமையா வாற கஸ்டமர் கூட இல்லை.எல்லோரும் வீட்டோட இருக்கினம் போல''

''ஓம் ஓம் லொக்டவுன் என்று சொன்னதால எல்லோரும் வெளியில் வராமல் இருக்கினம். இங்கனைக்குள்ளயும் ஒரு சன சந்தடியும் இல்ல.கோயிலுக்குள் நான்மட்டும்போய் பிள்ளையாருக்கு தீபம்காட்டி பூசை செய்திட்டு வாறான்''

''தெரியும் ஐயா எனக்கும் பூசை அங்கே பூசை ஒன்று இருக்கு..என்ன செய்யவது இப்போதைய நிலையில''

''தம்பி நான் இப்பதான் பூசை செய்பவர்கள் பெயர் பட்டியலை பார்த்தேன்.நாளைக்கு உரிய பூசை வழமையா நீங்கள்தான் செய்துகொண்டு வாறியள். அதுதான் உங்களை கேட்பம் என்று எடுத்தனான்.'' என்றார் சர்மா.

''ஐயா என்ன சொல்லுறியள்.இந்த நேரத்தில எப்படி ஐயா நாங்கள் கோவிலுக்கு வந்து பூசை செய்வது.சாமி கும்பிடுறது.வீட்டில் பெண்சாதி பிள்ளைகள் வெளிக்கிடாயினம்''



''தம்பி பிரகாஸ் அது தெரியும்தானே.நீங்கள் ஒன்றும் வரத்தேவையில்ல.நானே வடிவா உங்கட பேரால பூசையச் செய்து எல்லாருக்கும் அர்சனைபோட்டு வட்சாப்பில் அனுப்பி வைக்கிறன்.உங்களுக்கும் திருப்தி .உங்கட பூசை செய்தமாதிரியும் ஆயிடும் என்ன சொல்லுறியள்''

''அது சரி ஐயா அதற்குரிய சாமான்கள், செலவுகள் எல்லாம் இருக்கல்ல. அதுதான்'' என்று யோசித்தான் பிரகாஷ் .

''அதுக்கொண்டும் நீர் யோசியாதேயும்.காசை தந்தால் நானே எல்லாம் வாங்கி நெய்வேத்தியத்தோட அபிஷேகபூசைய அமர்களமாய் செய்து போட்டு போட்டோக்களை அனுப்பிவிடுவன்''

''அப்படியா ஐயா.அப்பா காசு எவ்வளவு மட்டில் வரும் ஐயா''

''வழமையா முன்னூறு தானே கொடுக்கிறது. நீங்க இப்ப இருநூற்றுஐம்பது அனுப்பிவிடுங்க நான் அதுக்குள்ள எல்லாம் சரிப்பண்ணிப்போடுறன்.''

''சரியையா நான் உங்கட எக்கவுண்டில் போட்டுவிடுறன்.இப்பவே ஒன்லையில் போட்டுவிடுறன் உங்கட எக்கவுண்ட் நம்பர்,பேங்க் பற்றிய விபரம் எல்லாம் எனக்கு அனுப்பி விடுங்கோ'' ''சரி உடனே அனுப்புகிறேன்'' என்று சொல்லி தனது விபரங்களை அனுப்பிவிட்டு, ''சரிதம்பி.அப்ப நாளைய பூசைய அமர்களமாய் செய்துபோடுறன் .அப்ப வைக்கட்டே''.

''ஓம் வையுங்கள்.முடிஞ்சால் கொரோனா பெயரில் ஒரு அர்ச்சனை செய்து அதைஅடியோட ஓட்டப் பாருங்க ஐயா'' என்று வைத்துவிட்டான் பிரகாஷ். இப்போது சுந்தரசர்மா முகத்தில் சந்தோசம் ஒருத்தர மடக்கிடோம்.அடுத்தவரை பிடிப்போம் யாரைப்பிடிக்கலாம் என்று யோசித்தவருக்கு சட்டென்று எக்கவுண்டன் சரவணன் நினைவுக்கு வர அவருக்கு அழைப்பை ஏற்படுத்தினார் சர்மா.

''ஹலோ... ஹலோ ''

''ஹலோ, நான் பிள்ளையார் கோயில் சுந்தரசர்மா கதைக்கிறன்''

''ஆ ஐயாவே சொல்லுங்கையா எப்படி இருக்கிறியள்''

''பரவாயில்ல ஏதோ கோயிலோட வீடு எண்டபடியால் இரண்டையும் பார்த்துகொண்டு இருக்கிறன் சரவணன்''

''அதுசரி வேறு என்னதான் செய்வது வீட்டோடு இருந்து அலுப்படிக்குது வேலையும் இல்ல ஒன்றும் இல்ல வீட்டில் இருந்துகொண்டு வீட்டுக்காரிக்கு சமையலுக்கு வெங்காயம் வெட்டி கொடுக்கிற பிழைப்பாய் போயிட்டு ஐயா''

''எல்லார்பாடும் அப்படித்தான் ஆயிட்டுது.கடுகதியில கணபதியான் நம்மை காத்து அருளுவான்''

''ஐயா சொன்னாப்போல எப்படியையா கோவில் நடக்கிது.ஆக்கள் ஒருத்தரும் வரமாட்டினம் நம்மட சைவக் கோவில்கள் மட்டுமல்ல,சேர்ச்சுகள் ,மொஸ்க்குகள் எல்லாம் மூடியே கிடைக்கின்றன.''

''மூடிக் கிடந்தாலும் தம்பி,மத குருமார்கள் வழிபாடு செய்வார்கள்தானே.நம்மட கோவிலிலும் நான் மூன்று நேர பூசைகள் செய்கிறன்தானே.தனிபூசை உள்ளவர்களுக்கு அவர்களின் பூசையை செய்து அனைத்தையும் வட்சப் மூலம் உடனே அனுப்பி விடுகிறேன்''

''அட,அப்பிடியே சங்கதி.எங்கட பூசையும் ஒண்டு இருக்குதே ஐயா''

''ஓம் அதை சொல்லத்தான் இப்ப நான் எடுத்தனான். பெயர் பட்டியலில் உங்கட பூசை நாளை மறுநாள் இருக்கு.''

''ஐயா கண்டிப்பாக எங்களால வரமுடியாது.வீட்டில் மனுசிக்கு தெரிந்தால் எப்படியும் போவோம் என்று நிப்பா.கோவில் என்றால் இனி அவவை கேட்கவே வேணும்.அதனால் அவவுக்கு தெரிய படுத்தவேண்டாம் ''

''இல்லை இல்ல நீங்க வரத்தேவையில்ல,உங்களை வரச்சொல்லி நான் சொல்லப்போறதுமில்ல, மற்ற பூசைக்காரருக்கு செய்யிறதுபோல நானே உங்கட பெயரில் எல்லாம் செய்து வட்சப்பில் மந்திரங்களுடன் குடும்ப பெயர்களுக்கு அர்ச்சனை யும் செய்து அனுப்பி விடுகிறேன்.செலவை மட்டும் அனுப்பி விடுங்க.''

''என்னய்யா சொல்லுறீங்க புரியல்ல ''

''பூசை சாமான்,அபிஷேகத்துக்குரிய பொருட்கள் பால்,பழங்கள் என்று வாங்க வேண்டுமல்ல. பணத்தை அனுப்பி விட்டால் நான் பக்கத்துக் கடையில வாங்கி எல்லாம் பண்ணி முடிக்கிறன். சரிதானே சரவணன்''

''ஐயா பூசைக்கு உரிய விசயமெல்லாம் இவதான் பாக்கிறவ.எனக்கு ஒன்றும் தெரியாது.காசு எவ்வளவு வரும் என்றும் தெரியாது''

''உங்கட அவவுக்கு தெரியும் பூசைக்கு முன்னூறு தான் மொத்தமா தருவா, நீங்க இப்போதைக்கு இருநூற்றி ஐம்பது போட்டுவிடுங்க.என்ற எக்கவுண்ட் விபரங்களை தாறன் சரியே.''

'''கொஞ்சம் டைட்டடாத்தான் இருக்கையா.எதற்கும் அனுப்புங்க நான் எப்படியும் பார்த்து அனுப்பி விடுகிறேன் கோவில் விஷயம் எண்டு வந்தால் எப்படியும் செய்து முடிக்கணும் என்று இவ சொல்லுவா நீங்க அனுப்புங்க ஐயா''

''சரி ராசா,நான் வட்சப்பில் எல்லா விபரமும் அனுப்புகிறேன்.'' என்று சொல்லி

கதைக்கிறதை நிறுத்திவிட்டார் சுந்தரசர்மா.

இப்போ சமையல் அறையிலிருந்து அழைப்பு வருகிறது.

''என்னங்க வாங்க காலைசாப்பாட்டு ரெடி ஆயிட்டு. எனக்கும் மாலை கட்டுற வேலையிருக்கு.'' என்றார் அம்புஜம்மாள் .

''இதோ வந்திட்டன் அம்புஜம் இன்னுமொரு போன் கால் எடுத்திட்டு வந்திடுறன்'' என்றவர் தனது போனில் வேறு ஒரு நம்பருக்கு முயற்சிக்கும்போது,அவரின் போனுக்கு ஒரு அழைப்பு வந்தது.

''ஹலோ வணக்கம்''

''ஐயா வணக்கம் நான் மணியம் பேசுகிறேன் ஐயா. ஞாபகம் இருக்கோ ஐயா நான் கோவிலுக்கு வழக்கமாக வாறனான்.இந்த கொரோனா வருவதற்கு முதற்கிழமை வந்து உங்களை சந்தித்து என் கிரகபலன் பார்த்தனான்''

''அடடா மணியன் தம்பியே சொல்லுமையா எப்படி இருக்கிறீர்.''

''இருக்கிறன் ஐயா லொக்டவுன் வந்ததும் வந்தது இப்ப வீட்டோடுதான்.டாக்சி ஓடவும் முடியாது.தப்பித்தவறி போனால் வந்து ஏறுபவர்கள் கொரோனா நோயாளிகளோ என்று பயம் வந்தது அதனால் இரண்டு மதங்களுக்கு முன்னமே நிறுத்திப்போட்டன்.இந்த புது வருஷம் எனக்கு அவ்வளவு நல்லா இல்லை ஐயா.''

''நீர் கடக ராசியல்லே கடந்தமுறை வந்தபோது கடக ராசி பலன் என்னவெண்டு கேட்டுபோனதாய் எனக்கு ஞாபகம் இல்லையே''

''சரிதான் ஐயா,என்ர ராசி கடகராசிதான்.''

''தம்பி இந்த வருட ராசிப் பலன்களில் நான்கு ராசிகளுக்கு போதாதகாலம் .அதில் கடக ராசியும் ஒன்று .ஆனால் பரிகாரம் இருக்கிறது. சாந்தி செய்தால் சரியாக்கிடலாம்.''

''அப்பிடியே ஐயா அதுதான் உங்களுக்கு நான் இப்ப போன் எடுத்தனான்.நான் எப்படி ஐயா வந்து உங்களை சந்திப்பது''

''தம்பி நீர் ஒன்றும் வரத்தேவையில்லை நானே இங்கே கோவிலில் வைத்தே உந்த பிரச்சினையை முடிச்சுவிடுவன்.உம்மட குறிப்பு என்னிடம் இருக்குதானே.அதைவைத்து கணக்குப் பார்த்து சரிக்கட்டிவிடலாம். உன் பெயரில் அர்ச்சனைகள் செய்து விசேட பூசையும் ஒண்டு பிள்ளையாருக்கு செய்தம் என்றால் எல்லாம் சரியாகிடும் ''

''ஐயா அப்பிடியானால் அதை உடனே செய்யுங்கோ நான் செலவுக்குரிய காசை தாறன்.''

''ஓம் அப்பிடியே செய்துபோட்டு எல்லாத்தையும் வட்சப்பில் அனுப்பி விடுகிறேன்.காசு முந்நூறு வரும் நீர் இருநூற்றி ஐம்பது அனுப்பும் நான் பார்த்துகொள்கிறேன் சரியே''




''சரியையா சந்தோசமையா.காசை நான் அனுப்பி விடுகிறேன் உங்கட எக்கவுண்ட் நம்பரை தாருங்கோ''

''ஓம் இப்பவே போட்டுவிடுகிறேன்.காசை போட்டு விடும் .மற்ற விஷயம் எல்லாம் நல்ல மாதிரி நடக்கும் வைக்கட்டே'' என்று கட் பண்ணினார் சுந்தரசர்மா.

மீண்டும் அம்புஜத்தின் அழைப்பு வர, தனது காலை உணவிற்காக எழுந்து போனார் பிள்ளையார் கோவில் சுந்தர சர்மா..இன்றைய அவர் வருமானம் எக்கச்சக்கம். என்று அறிந்ததும் அம்புஜம் அவரை விழுந்து விழுந்து உபசரித்தார்.

# பொத்துவில் மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கிவைப்பு





**(அப்துல் கபூர், எம்.எம்.ஜெஸ்மின்)**

திகாமடுல்ல மாவட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் அவர்களின் வேண்டுகோளின் பேரில் இலங்கை அல் நூர் சமூகசேவை அமைப்பின் உதவியுடன் பொத்துவில் பிரதேசத்தின் நீர்ப்பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு பொத்துவில் பிரதேசத்தில் மூன்று பிரதேசங்களில் ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

அத்திட்டத்தின் முதற்கட்டமாக, செங்காமம் கிராமத்தின் மிக நீண்டகால பிரச்சினையாகவிருந்து வருகின்ற குடிநீர் பிரச்சினையினை தீர்க்கும் பொருட்டு, கடந்த 16 ம் திகதி ஆழ்துளை குழாய்க் கிணறு அமைக்கும் வேலைகள் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம், குறித்த பிரதேசத்தில் வசிக்கும் சுமார் 500 குடும்பங்கள் நன்மையடையவுள்ளதோடு, மக்களின் சுகாதார, பாதுகாப்பு மேம்பாடு அடையக்கூடிய நிலை இதன் மூலம் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பிட்ட ஆழ்குழாய்க் கிணறு கடந்த வியாழக்கிழமை மக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேச பொதுமக்கள் கருத்து தெரிவிக்கையில் பல்வேறு அரசியல் வாதிகள் காலத்திற்கு காலம் வாக்குகளுக்காக பொய் வாக்குறுதிகளினை வழங்கிவிட்டு சென்றால் பின்னர் அடுத்த தேர்தலில் மட்டும் வருகை தந்து உரிமை பேசி எங்களது வாக்குகளை சூறையாடிச் செல்லும் அரசியல் வாதிகளுக்கு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர் ஒரு செயல் வீரன் என தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பு செயலாளர் வை.எல்.நியாஸ் மற்றும் திட்ட அமுலாக்கல் குழுவின் உறுப்பினர்களும், இலங்கை அல் நூர் சமூகசேவை அமைப்பின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரதிக் கல்விப் பணிப்பாளராக மஜீத் நியமனம்!



**(வி.ரி.சகாதேவராஜா)**

சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக(கல்வி அபிவிருத்தி) ஏ.எல்.அப்துல் மஜீத் நேற்று (18) முதல் உடன் செயற்படும் வண்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் சஹூதுல் நஜீம் இந்நியமனத்தை வழங்கினார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளராக(கல்வி அபிவிருத்தி) கடந்த 4வருடங்களாக கடமையாற்றிய ஏ.எம்.நௌசாட் கடந்தவாரம் மாவனல்ல சாஹிறாக்கல்லூரிக்கு அதிபராக நியமனம் கிடைத்துச்சென்ற காரணத்தினால் இவ்வெற்றிடம் ஏற்பட்டது.

சம்மாந்துறையைச் சேர்ந்த இவர் இதற்கு முன் உதவிக் கல்விப் பணிப்பாளராக(திட்டமிடல்) கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் உலர் உணவு விநியோகம்



கொழும்பு கம்பனி தெரு , மோகன் வீதி மற்றும் கிவி வீதி பொலிஸ் பிரிவுகளில் வசிக்கும் குறைந்த வருமானம் கொண்ட 500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கும் நிகழ்வு நேற்று (18) நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களை நன்கொடையாக வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பெற்றோலிய வளங்கள் நிறுனத்தின் தலைவர் முஹம்மட் உவைஸ், நீதி அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளர் பயாட் பாக்கீர், நீதி அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளர் நலின் சமரகோன், நீதி அமைச்சரின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி முகம்மட் முப்லிஹ் மற்றும் உல்பத் உவைஸ் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# பசளை, கிருமிநாசினிகள் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்!

## அம்பாரை மாவட்ட விவசாயிகள் கோரிக்கை



**(வி.சுகிர்தகுமார்)**

விவசாய செய்கைக்கான பசளை மற்றும் கிருமிநாசினிகள் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தி தம்மை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்பாரை மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் சேதனப்பசளை அம்பாரை மாவட்ட விவசாய நிலங்களுக்கு அதிகம் பொருந்தாது. அவ்வாறு பாவிப்பதானாலும் இரசாயனப்பசளையோடு கலந்து படிப்படியாகவே நிலத்தை சேதனப்பசளை மூலம் வளப்படுத்தி பாவனையினை அதிகரிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

அம்பாரை மாவட்ட விவசாயிகள் தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச விவசாயிகள் 2021 சிறுபோகத்தில் உரம் ,களை நாசினி ,கிருமி நாசினி தட்டுப்பாட்டினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

காலா காலமாக யூரியா பசளை போட்டு விவசாயம் செய்து வந்த எங்களுக்கு எங்களது நிலத்துக்கு சேதன பசளை சரிவராது யூரியா பசளையே தேவை எனவும் கூறுகின்றனர்.

2021 சிறு போகத்தில் அரசாங்கத்தினால வழங்கப்பட்ட இரசாயன மானிய உரம் தந்த போதும் அது தங்களுக்கு போதுமானதாக இல்லை எனவும் சேதன பசளையையும் முறையாக கிடைப்பதில்லை என்பதோடு அதை பாவித்து பார்க்கையில் சேதனப்பசளைக்கு வளர்ச்சி போதாமல் குன்றிக்காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டனர்.

இதேநேரம் வழமையாக தேவைப்படும் உரத்தை வெளிச்சந்தைகளில் வர்த்தகர்களிடம் இருந்து பணம் செலுத்தி பெற்று வந்ததாகவும் இப்போகத்தில் சேதனப்பசளை பாவிக்க வேண்டும் என அரசாங்கம் அறிவித்ததால் இரசாயனப் பசளைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அளவுக்கு வர்த்தகர்கள் உரத்தை பதுக்கி வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டனர். மேலும் 1500 ரூபாவுக்கு விற்கவேண்டிய 50 கிலோ உரப்பையை 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்வதாகவும் இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து பசளை ,கிருமி நாசினி,களை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

தற்போது நெற்செய்கையில் அறக்கொட்டி நோய், மஞ்சள் நிற நோய் போன்ற நோய் தாக்கங்கள் ஏற்பட்டு இலைகள் சிவந்து வய்க்கோல் நிறத்துக்கு மாறிவருவதாகவும் அதற்குரிய நாசினிகளை பெறுவதும் கடினமாக உள்ளதாக தெரிவித்தனர்.

நாசினிகளுக்கான தட்டுப்பாடு மற்றும் தேடிப் பெற இயலாத நிலமை காரணமாக கூடிய விலைக்கு விற்பனை செய்கின்றனர். இப்படியான நிலையால் விவசாயிகள் வெகுவாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

# கோமாரிப் பிரதேசத்தில் அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள்

**(எம்.ஏ.றமீஸ்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் அதிகரித்து வரும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையினைத் தொடர்ந்து இப்பிராந்தியத்திற்குட்டப 13 பிரதேச சுகாதார சேவைகள் பணி மனைகள் மூலம் விஷேட கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், பொத்துவில் பிரதேச சபை மற்றும் பாதுகாப்புப் படை மூலமான தீடீர் சோதனை



நடவடிக்கைகளும், பீ.சி.ஆர் மற்றும் றெபிட் அன்ரிஜன் பரிசோதனைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கோமாரி பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களை திறந்து பொதுமக்களுக்கு அத்தியவசியப் பொருட்களை விநியோகிக்கும் செயற்றிட்டத்திற்கமைவாக அப்பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு சுகாதார பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, உரிய அனுமதிப் பத்திரமற்று வீதிகளில் நடமாடுபவர்களுக்கு இவ்வாறு அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.